வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu

Email : eelanaduweekly@gmail.com | மலர் : 07 | 21.01.2026 புதன்கிழமை | இதழ் : 21 | பக்கங்கள் : 08




# கிவுல் ஓயாத் திட்டத்தை மீள ஆரம்பிக்க அனுமதி

## அமைச்சரவை வழங்கியது

கொழும்பு, ஜனவரி 21

கிவுல் ஓயா திட்டத்தை மீண்டும் ஆரம்பிப்பதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது. அத்துடன், இந்தத் திட்டத்துக்கான நிதியை 2 ஆயிரத்து 345. 6 கோடி ரூபாயாக அதிகரிக்கவும் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

மேலும், இந்த வருடத்திலேயே கிவுல் ஓயா திட்டத்தை ஆரம்பித்து எதிர்வரும் 2031ஆம் ஆண்டுக்குள் நிறைவு செய்யவும் நேற்று முன்தினம் நடந்த அமைச்சரவை கூட்டத்தில் முடிவு எட்டப்பட்டுள்ளது.

வவுனியா, முல்லைத்தீவு மாவட்டங்களில் நிலவும் குடிதண்ணீர் பற்றாக்குறை, வறுமை, குறை விவசாய உற்பத்தித் திறன் போன்ற பிரச்னைகளுக்கு தீர்வாகவே கிவுல் ஓயா திட்டம் நடைமுறைப்படுத்தப் படுவதாகக் கூறப்படுகிறது. எனினும், இது வடக்கில் தமிழ் மக்களின் காணிகளை அபகரிக்கும் நோக்கிலும் - குடிப் பரம்பலை திட்டமிட்ட முறையில் மாற்றியமைக்கும் நோக்கிலும் கொண்டுவரப்படுகிறது என்று இந்தத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்ட காலம் முதல் எதிர்ப்புகள் வெளியிடப்பட்டு வருகின்றன என்பதும் குறிப்பிடத்தக்கது.

முன்னதாக, கிவுல் ஓயா அபிவிருத்தி கருத் திட்டத்தை நடைமுறைப்படுத்த கடந்த 2011 செப்ரெம்பர் 28ஆம் திகதி நடைபெற்ற அமைச்சரவை கூட்டத்தில் அனுமதி வழங்கப்பட்டது. அன்றைய மதிப்பில் 417 கோடி ரூபாய் செலவில் மகாவலி எல் வலய கட்டமைப்பின் ஊடாக 4 வருடங்களில் இந்தத் திட்டத்தைப் பூர்த்தி செய்யத் திட்டமிடப்பட்டிருந்தது.

07

# தமிழர் அபிலாசைகளை பிரதிபலிக்கும் ஆவணத்தை தயாரிக்க நடவடிக்கை!

**இந்த முயற்சியில் தமிழ் தேசிய கட்சிகளை இணையுமாறு தமிழ் அரசு, கூட்டணி அழைப்பு**

யாழ்ப்பாணம், ஜன. 21

தமிழ் மக்களின் அபிலாசைகளை பிரதிபலிக்கக் கூடிய ஓர் ஆவணத்தை இலங்கை தமிழ் அரசு கட்சியும் ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியும் தயாரிக்கவுள்ளன. இந்த முயற்சியில் தமிழ்த் தேசிய பரப்பில் இயங்கும் ஏனைய தரப்புகளும் எம்முடன் இணைந்து செயலாற்ற வேண்டும் என்று அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இலங்கை தமிழ் அரசு கட்சியின் பதில் பொதுச் செயலாளர் எம். ஏ. சுமந்திரன், ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியின் ஊடகப் பேச்சாளர் சுரேஷ் க. பிறேமச்சந்திரனுடன் நேற்று இணைந்து

07



# திருமலையில் 42 கோவில்கள் சட்டவிரோத கட்டடங்களாம்!

**34 கோவில்களை அகற்ற நீதிமன்று உத்தரவிட்டுள்ளது என்கிறார் சரத்**

கொழும்பு, ஜன. 21

திருகோணமலை கடற்கரை ஓரங்களில் சுமார் 8 கோவில்கள் சட்டவிரோதமாக அமைக்கப்பட்டுள்ளன. 34 சட்டவிரோத கோவில்களை அகற்றுமாறு நீதிமன்ற உத்தரவு இருந்தும் அவை இன்னும் நடைமுறைப் படுத்தப்படவில்லை - இவ்வாறு தெரிவித்துள்ளார் சிறீ லங்கா பொதுஜன பெரமுனவின்

07

# முன்னறிவித்தல் எதுவுமின்றி வேலை நிறுத்தம் செய்வோம்

**மின்சார சபை தொழிற்சங்கங்கள் எச்சரிக்கை**

கொழும்பு, ஜன. 21

எந்த முன்னறிவித்தலும் இன்றி நாடளாவிய ரீதியில் வேலை நிறுத்தத்தில் ஈடுபடுவோம் என்று மின்சார தொழிற் சங்கங்கள் எச்சரிக்கை விடுத்துள்ளன.

மின்சார சபை மறுசீரமைப்பின் கீழ் மின்சார சபை ஊழியர்களின் உரிமைகளை உறுதிப்படுத்த வலுசக்தி அமைச்சு இதுவரை எவ்வித நடவடிக்கையையும் எடு க்கத் தவறியமையா லேயே இவ்வாறு தொழிற்சங்க

07

# கல்வி அமைச்சருக்கு எதிராக அரசு சதித்திட்டம் தீட்டுகிறதா?

**எதிர்க்கட்சி தலைவர் சந்தேகம்**

கொழும்பு, ஜன. 21

கல்வி அமைச்சர் நாட்டில் இல்லாத நேரத்தில் எதிர்க்கட்சியால் கொண்டு வரப்படவுள்ள நம்பிக்கையில்லா பிரேரணையை அவசர அவசரமாக விவாதத்துக்கு எடுக்க இந்த அரசாங்கம் ஏன் முயல்கிறது. கல்வி அமைச்சருக்கு எதிராக அரசாங்கமே ஒரு சதித்திட்டத்தை தீட்டி வருகிறதா என்று சந்தேகம் எழுகிறது - இவ்வாறு எதிர் க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித் துள்ளார்.

07

# தமிழீழ விடுதலை போராட்ட முன்னோடி முத்துக்குமாரசாமி நேற்று காலமானார்!



யாழ்ப்பாணம், ஜன. 21

தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் முன்னோடிகளில் ஒருவரான குமார் என்று அழைக்கப்பட்ட தம்பித்துரை முத்துக்குமாரசாமி நேற்று செவ்வாய்க்கிழமை அமெரிக்காவில் காலமானார்.

யாழ்ப்பாணம் - திருநெல்வேலியை பூர்வீகமாகக் கொண்ட இவர், 1970களில் தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்தை ஆயுதவழிக்கு மாற்றியமைத்தவர்களில் ஒருவராகத் திகழ்ந்தார். தமிழீழ மாணவர் பேரவையை சேர்ந்தவரான இவர், அரச

07

# கல்வி மறுசீரமைப்பை நாங்கள் எதிர்க்கவில்லை

**எதிர்க்கட்சி தெரிவிப்பு**

கொழும்பு, ஜன. 21

புதிய கல்விக் கொள்கைக்கு நாங்கள் எதிர்ப்பு தெரிவிக்கவில்லை. நடைமுறைக்கு சாத்தியமான வகையில் புதிய கல்வி கொள்கை அமுல்படுத்தப்பட வேண்டும். தற்போது அமுல்படுத்தியுள்ள கொள்கை திட்டத்தில் காணப்படும் குறைகளை நிவர்த்தி செய்துக் கொண்டு புதிய கல்விக் கொள்கையை அமுல்படுத்த வேண்டும். அதற்கு நாங்கள் முழுமையான ஒத்துழைப்பு வழங்குவோம் என்று ஐக்கிய மக்கள் சக்தியின்

07

# விபத்துகளில் 120 பேர் பலி

கொழும்பு, ஜன. 21

நடப்பு ஆண்டில் கடந்த 19 நாட்களில் 120 பேர் உயிரிழந்துள்ளனர் என்று போக்குவரத்து கட்டுப்பாடு மற்றும் வீதி பாதுகாப்புப் பிரிவுக்கு பொறுப்பான பிரதி பொலிஸ் மா அதிபர் டபிள்யூ. பி. ஜே. சேனாதீர

07

# அரச கட்டடங்களில் கைதிகளை தடுத்து வைப்பதற்கு தீர்மானம்!

**நீதி அமைச்சர் ஹர்சன**

கொழும்பு, ஜன. 21

போதைப்பொருள் சார்ந்த குற்றங்களில் கைது செய்யப்படுபவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. இதனால், சகல சிறைச்சாலைகளிலும் நெரிசல் காணப்படுகிறது. எனவே, பயன்பாட்டில் இல்லாத அரச கட்டடங்களில் சிறு குற்றங்களுடன் தொடர்புடைய கைதிகளை தடுத்து வைக்க தற்காலிகமாகத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாடு அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார தெரிவித்துள்ளார்.

07

# கொடிகாமம் கொலை வழக்கு; இருவருக்கு மரண தண்டனை

த. பிரதீபன்

யாழ்ப்பாணம், ஜன. 21

கொடிகாமத்தில் ஒருவரை கோடரி மற்றும் பொல்லுகளால் தாக்கி கொன்ற வழக்கில் குற்றவாளிகளாக இனங்காணப்பட்ட இருவருக்கு யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றம் மரண தண்டனை விதித்துள்ளது.

நேற்று செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதி டி. எஸ். சூசைதாஸ் இந்தத் தண்டனை தீர்ப்பை வழங்கினார்.

கடந்த 2010 டிசெம்பர் 16ஆம் திகதி கொடிகாமம் - மந்தைவெளியில் 60 வயதான

07

# வீட்டு திட்ட கொடுப்பனவு கோரி யாழ்ப்பாணத்தில் கவனவீர்ப்பு!

யாழ்ப்பாணம், ஜன. 21



முன்னர் நடைமுறைப்படுத்திய வீட்டுத் திட்டங்களுக்கான கொடுப்பனவை வழங்குமாறு கோரி வடக்கு மாகாண ஆளுநர் செயலகம் முன் பாக நேற்று போராட்டம்

07

உண்மைகள் புனிதமானவை கருத்துக்கள் சுதந்திரமானவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குழந்தைகளுக்கு தமிழில் பெயர் சூட்டுவது ஊக்குவிக்க தீர்மானம்

## பருத்தித்துறை நகர சபை நிறைவேற்றியது

வடமராட்சி, ஜன. 21

பருத்தித்துறை நகர சபையின் எல்லைக்குள் பிறக்கும் குழந்தைகளுக்கு தமிழில் பெயர் சூட்டுவதை ஊக்குவிப்பது என்று அந்த நகர சபை தீர்மானம் எடுத்துள்ளது.

அத்துடன், பருத்தித்துறை துறைமுகம் முன்பாகவுள்ள இராணுவ சிற்றுண்டிச் சாலை இரு பாடசாலைகளுக்கு அண்மையாக அமைந்திருப்பதால் புகைத்தல் பொருட்கள் விற்பனைக்கு தடை விதிப்பது என்றும் தம்மிடம் உரிய அனுமதி பெறாத பட்சத்தில் அந்தச் சிற்றுண்டிச்சாலையை மூடுவது எனவும் அந்த சபை தீர்மானித்துள்ளது.

நகர பிதா வின்சன் டீ போல் டக்ளஸ் போல் தலைமையில் நேற்றைய தினம் நடந்த சபை அமர்விலேயே இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

மேலும், நகர எல்லைக்குள் பாடசாலைகள் ஆரம்பமாவதற்கு முன்னர் காலை 6:45 மணி தொடக்கம் 8:00 மணி வரையும் பாடசாலை நிறைவடையும் நண்பகல் 12 மணி முதல் 2 மணி வரையும் கனரக வாகனங்கள் அந்த வீதிகளில் பயணிக்கத் தடை விதிப்பது என்றும் தீர்மானம் இயற்றப்பட்டுள்ளது.

இவை தவிர, இந்த ஆண்டுக்கான நிதி குழு, சுகாதார குழு, பெறுகை குழு உட்பட பல குழுக்கள் தெரிவு செய்யப்பட்டன. (ஐ-02-03-05-08)

# யாழ். போதனா மருத்துவமனையின் சி.ரி. ஸ்கான் பரிசோதனை வழமைக்கு

யாழ்ப்பாணம், ஜன. 21

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சி. ரி. ஸ்கான் பரிசோதனைகள் வழமைக்கு திரும்பியுள்ளன.

மருத்துவமனையின் சி. ரி. ஸ்கான் இயந்திரம் பழுதடைந்தமையால் இரு வாரங்களுக்கு மேலாக அது தொடர்பான சேவைகள் பொதுமக்களுக்கு கிட்டவில்லை. இந்த நிலையில், சி. ரி. ஸ்கான் இயந்திரத்தின் திருத்தப் பணிகள் நிறைவடைந்து நேற்று முதல் பரிசோதனைகள் வழமைக்கு திரும்பின.

சி. ரி. ஸ்கான் பரிசோதனைகள் இனி தொடர்ச்சியாக நோயாளர்களுக்கு கிடைக்கும் என்று மருத்துவமனை நிர்வாகம் அறிவித்துள்ளது. (ஐ)

# தையிட்டி விகாரையை கட்டித்தர தயார் ஆனால், மக்களின் காணியை விடுங்கள்

## அகில இலங்கை மக்கள் எழுச்சி கட்சி

யாழ்ப்பாணம், ஜன. 21

தையிட்டி விகாரைக்குரிய காணியில் அதனைக் கட்டித்தர நாம் தயார். ஆனால், ஆக்கிரமிக்கப்பட்ட மக்களின் பூர்வீக காணிகளை அவர்களிடமே வழங்குங்கள் - இவ்வாறு அகில இலங்கை மக்கள் எழுச்சி கட்சியின் பொதுச் செயலாளர் அருள் ஜெயந்திரன் தெரிவித்துள்ளார்.

நேற்றைய தினம் தனது கட்சி பணிமனையில் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், தையிட்டி விகாரையை நாம் எதிர்க்கவில்லை. ஆனால், அது அமைக்கப்பட்ட விதத்துக்கு எதிராகவே மக்கள் போராடுகின்றனர். கடந்த அரசாங்கங்கள் போன்று அநுர அரசாங்கமும் இனவாதத்தை தொடர்ந்தும் பேசாமல் அதைத் தடுக்க பாராளுமன்றில் சட்டம் இயற்றி நடைமுறையாக்க வேண்டும் - என்றார்.

(ஐ-03-05)

# வடக்கின் கல்வி துறையில் அரசியல் தலையீடுகள்!

## தாய்மொழி ஆசிரியர் சங்கம்

யாழ்ப்பாணம், ஜன. 21

வட மாகாணத்தில் கல்வி துறையில் அரசியல் தலையீடுகள் நிறுத்தப்பட வேண்டும் என்று இலங்கை தாய்மொழி ஆசிரியர் சங்கத்தினர் வலியுறுத்தியுள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே அவர்கள் மேற்கண்ட விடயத்தைத் தெரிவித்தனர்.

மேலும், "கல்வி என்பது சுயாதீனமாக இயங்க வேண்டும். ஆனால், வட மாகாணத்தில் கல்வியைப் பொறுத்தவரை அரசியல் தலையீடுகள் காணப்படுகின்றன.

வட மாகாணத்தில் உள்ள அரசியல் உயர் மட்டங்கள் தமது விருப்பத்துக்கு ஏற்ற மாதிரி செயலாளர்கள், மாகாண பணிப்பாளர்களை நியமிக்கின்றனர். இது முற்றாக மாற்றப்பட வேண்டும். கல்வி மாற்ற கொள்கையை வரவேற்கிறோம். எனினும், மாணவர்கள் ஆசிரியர்கள் மத்தியில் ஒரு தெளிவின்மை காணப்படுகிறது. அதனை அர சாங்கம் சரியான முறையில் புரியவைக்க வேண்டும். அதன் பின் னர் புதிய கல்வி சீர்திருத்த கொள்கை கொண்டு வருவது வரவேற்கத்தக்கது - என்றனர். (ஐ)

# வாகன இறக்குமதி ரூ. 904 பில். வருமானம்

கொழும்பு, ஜன. 21

நாட்டுக்கு வாகனங்களை இறக்குமதி செய்வதன் மூலம் அரசாங்கத்திற்கு இதுவரை 90 ஆயிரத்து 400 கோடி ரூபாய் வருமானம் அரசாங்கத்திற்குக் கிடைத்துள் ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று பாராளுமன்றத்தில் ரோஹித அபேகுணவர்தன எம். பி. எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும்போதே பொருளாதார அபிவிருத்தி பிரதியமைச்சர் நிஷாந்த ஜயவீர இதனைத் தெரிவித்துள்ளார்.

90 நாட்களுக்குள் இறக்குமதி செய்யப்படும் வாகனங்களை சுங்கத்திலிருந்து விடுவிப்பதற்கு 3 வீத வரி சேர்க்கப்படுவதாகவும், 5 மாத காலப்பகுதிக்குள் இது சுமார் 45 வீத வரை அதிகரிப்பதாகவும், இதனால் நுகர்வோரே அந்த மேலதிக பணத்தைச் செலுத்தவேண்டி ஏற்படுவதாகவும் ரோஹித அபேகுணவர்தன கேள்வி எழுப்பியுள்ளார்.

அதற்குப் பதிலளித்த பிரதியமைச்சர், வாகன இறக்குமதியின்போது இறக்குமதியாளர்கள் மீது இந்த மேலதிக வரி விதிக்கப்பட்டுள்ளமையானது, நாட்டிற்குள் அந்நிய செலாவணியைத் தக்கவைத்துக்கொள்ளும் எதிர்பார்ப்பிலேயே மேற்கொள்ளப்பட்டுள்ளது எனக் குறிப்பிட்டுள்ளார். (அ)

# வடதாரகை படகு விரைவில் சேவையில் ஈடுபடுத்தப்படும்

## கடற்படையின் வடபிராந்திய தளபதி

யாழ்ப்பாணம், ஜன. 21

நெடுந்தீவுக்கான படகு சேவையில் வடதாரகை படகை மீண்டும் இயக்குவதற்கு விரைந்து நடவடிக்கை எடுக்கப்படும் என்று கடற்படையின் வடபிராந்திய கட்டளை தளபதி நெடுந்தீவு பிரதேச செயலரிடம் உறுதியளித்துள்ளார்.

கடற்படையின் வட பிராந்திய கட்டளை தளபதியை நெடுந்தீவு பிரதேச செயலர் என். பிரபாகரன் நேற்றைய தினம் சந்தித்துப் பேசினார். இதன்போதே மேற்கண்ட உறுதிமொழி வழங்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்த சந்திப்பில் குறிகாட்டுவான் கடற்போக்குவரத்தில் அண்மைக்காலமாக பிரதேச மக்கள், அரச அலுவலர்கள், சுற்றுலாவிகள் எதிர்கொள்ளும் பிரச்னைகள் குறித்து பிரதேச செயலர் எடுத்துரைத்தார்.

அன்றாடம் படகு சேவையில் ஈடுபட்டு வந்த வடதாரகை, குமுதினி, சமுத்திரதேவா படகுகள் சமகாலப்பகுதியில் சேவையில் ஈடுபடமுடியாத நிலை உள்ளது. இதனால், மக்கள் பெரும் இடர்களை எதிர்கொள்கின்றனர். இந்த இடரை நீக்க வடதாரகை படகு சேவையை இயக்க விரைந்து நடவடிக்கை எடுக்கப்படும் என்று இந்த சந்திப்பில் வடபிராந்திய தளபதி நம்பிக்கை அளித்தார். (ஐ)

# சட்டவிரோத கடல் அட்டை பிடிப்பு; 13 பேர் கிளிநொச்சியில் கைது!

கிளிநொச்சி, ஜன. 21

சட்டவிரோதமாக கடல் அட்டைகளை பிடித்தனர் என்ற குற்றச்சாட்டில் 13 சந்தேகநபர்கள் கிளிநொச்சியில் கைது செய்யப்பட்டனர்.

நேற்றுமுன்தினம் அதிகாலை கிளிநொச்சி வடக்கு, வலைப்பாடு கடற்பரப்பில் கண்காணிப்பில் ஈடுபட்ட கடற்படையினர் இவர்களை கைது செய்தனர்.

13 சந்தேகநபர்களிடமிருந்தும் ஆயிரத்து 108 கடல் அட்டைகள், 4 டிங்கி படகுகள், சுழியோடுவதற்கான உபகரணங்களையும் கடற்படையினர் கைப்பற்றினர் என்று தெரிவிக்கப்பட்டது.

கைதானவர்கள் அனைவரும் 29 முதல் 67 வயதுக்கு உட்பட்டவர்கள் என்றும் இவர்கள், கிளிநொச்சி, மற்றும் மன்னாரின் பள்ளிமுனை, தோட்டவெளி, சௌத்பார் பகுதிகளை சேர்ந்தவர்களாவர்.

கைதானவர்கள் அனைவரும் கிளிநொச்சி நீரியல் வளத்திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். (ஐ)

# வட்டு. மத்திய கல்லூரியின் நூற்றாண்டு ஆரம்ப விழா!

யாழ்ப்பாணம், ஜன. 21

வட்டு. மத்திய கல்லூரியின் நூற்றாண்டு ஆரம்ப நிகழ்வும் பொங்கல் விழாவும் நேற்று முன்தினம் கல்லூரியில் நடைபெற்றது.

இதன்போது, நடைபவனி நடைபெற்றது. தொடர்ந்து, பாடசாலை வளாகத்தில் உள்ள சரஸ்வதி திருவுருவச் சிலைக்கு மலர்மாலை அணிவிக்கப்பட்டு, பொங்கல் நடைபெற்றது.

இதன்பின்னர், மங்கல விளக்கேற்றி, இறை வழிபாடுகளுடன் அரங்க நிகழ்வுகள் ஆரம்பமாகின. பாடசாலையின் நிறுவுநரின் திருவுருவ படத்துக்கு மலர்மாலை அணிவிக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து மாணவர்களின் கலை நிகழ்வுகள், விருந்தினர்களின் உரைகள் நடந்தன. இந்த நிகழ்வுகளில் பலரும் பங்கேற்றனர். (ஐ-05)

## விண்ணக வாழ்வில் ஆண்டுகள் பதினேழு



திருமதி மரியதாசம்மா பீற்றர் திசநாயகம்
(இளைப்பாறிய ஆசிரியை)
மலர்வு 10.08.1932 உதிர்வு 21.01.2009

"நல்ல போராட்டத்தைப் போராடினேன், ஓட்டத்தை முடித்தேன், விசுவாசத்தைக் காத்துக்கொண்டேன்"-தீமோத்தேயு 4:7



அகிலத்தில் நல் அன்னையாய்
கற்பித்தலில் நல் ஆசானாய்
உறவுகளுக்கு வழிகாட்டியாய்
நீங்கள் எம்மோடு வாழ்ந்த காலங்கள்
நினைவில் பசுமையாய் நிறைந்திருக்க
நீங்கள் எமை விட்டு பிரிந்து
ஆண்டுகள் பதினேழு கழிந்திற்றோ?
ஞாலத்தில் காலங்கள் கடந்திடினும்
நின் நினைவுகள் என்றும் வாழும்!

உங்கள் ஆத்மா இறைசந்நிதியில் இளைப்பாற பிரார்த்திக்கின்றோம்.

- அன்பு மகள், மருமகன்,
சகோதரி, பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்,
உறவினர், நண்பர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු
20.01.2026 புதன்கிழமை
விசுவாவசு வருடம், தை 07

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com

# அரசாங்கம் நினைப்பதை செய்ய முடியும்

புதிய பயங்கரவாதத் தடைச் சட்டம் தொடர்பில் பரவலான உரையாடல்கள் நடைபெறுகின்றன. ஆளும் தரப்பு கொண்டுவரும் ஒன்றை எதிர்த்தல் என்னும் அடிப்படையில் எதிரணியினர் இந்த விடயம் தொடர்பில் பேசி வருகின்றனர். இதிலுள்ள வேடிக்கையான விடயம், புதிய பயங்கரவாதச் தடைச் சட்டத்தை எதிர்க்கும் தென்னிலங்கை அரசியல் தரப்புகள் அனைத்துமே பயங்கரவதத் தடைச் சட்டத்தை நீக்குவதற்கு எவ்வித நடவடிக்கையும் எடுக்காதவைதான்.

ஐ. நா. மனித உரிமைகள் பேரவை, ஐரோப்பிய ஒன்றியம் ஆகியவை பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்கும் முடிவை எடுக்குமாறு வலியுறுத்தி வந்தபோதிலும்கூட, முன்னைய ஆட்சியாளர்கள் எவருமே அதனைத் தீண்டவில்லை - இந்த நிலையில் பொரும்பான்மை பலமுள்ள தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் புதிய பயங்கரவாதத் தடைச் சட்டம் ஒன்றைக் கொண்டுவரப் போவதாக விவாதித்து வருகிறது.

இது தொடர்பில், மனித உரிமைகள் கண்காணிப்பகம் விமர்சித்திருக்கிறது. ஆனால், உலக மனித உரிமை அமைப்புகள் சிறிய நாடுகள்மீது அழுத்தம் கொடுக்கக்கூடிய நிலையில் இருக்கின்றனவா என்னும் கேள்வியுண்டு - அழுத்தங்களை பிரயோகித்தாலும்கூட, சிறிய நாடுகள் அவற்றை செவிமடுக்கக்கூடிய நிலையில் இருக்கின்றனவா என்பது அடுத்த கேள்வி.

ஒருவேளை ரணில் விக்கிரமசிங்க போன்ற ஒருவர் ஜனாதிபதியாக இருந்திருந்தால் இவ்வாறான கேள்வியை வெளிப்படையாகக் கேட்டிருப்பார். "எங்களுடைய நாட்டுக்கு என்ன தேவை என்பதை நாங்கள் பார்த்துக் கொள்கிறோம்", என்று கூறக்கூடிய நிலையிலேயே இலங்கை போன்ற நாடுகள் இருக்கின்றன. ஏனெனில், அந்தளவுக்கு உலக அரசியல் ஒழுங்கு குழம்பிப் போயிருக்கிறது.

ஐக்கிய நாடுகள் சபை சிறிய நாடுகளுக்கு அறிவுரை கூறும் தகுதியை முற்றிலுமாக இழந்துவிட்டது. இந்த நிலையில் புதிய பயங்கரவாதத் தடைச் சட்டத்தை சட்டமாக்குவதில் தேசிய மக்கள் சக்தி உறுதியாக இருந்தால் அதனைச் செய்வதில் எவ்வித தடையும் இல்லை. ஏனெனில், உள்நாட்டு நிலைமையும் உலகளாவிய அரசியல் சூழலும் அரசாங்கத்துக்கு மிகவும் சாதகமாகவே இருக்கின்றன.

பயங்கரவாதத் தடைச் சட்டம் அனைத்து நாடுகளிலும் இருக்கிறது. குறிப்பாக பயங்கரவாதத் தடைச் சட்டம் பலமானதாக இருக்க வேண்டும் என்பதே வல்லரசுகளின் விருப்பமாகவும் அறிவுரையாகவும் இருக்கிறது. ஏனெனில், உலகளாவிய பயங்கரவாத முறியடிப்புக்கு ஒத்துழைக்கும் வகையிலான உள்ளூர் ஏற்பாடுகளை அவர்கள் எதிர்பார்க்கின்றனர்.

இந்த நிலையில், அமெரிக்காவோ, இந்தியாவோ புதிய பயங்கரவாதத் தடைச் சட்டத்தை எதிர்க்கப் போவதில்லை. எனவே, இந்த விடயத்தில் அரசாங்கம் அதன் பெருபான்மையுடன் முன்னோக்கிப் பயணிக்க முடியும். தமிழ் கட்சிகள் இந்த விடயத்தில் மாற்றுப்பரிந்துரைகளை முன்வைக்கலாம். மாறாக, புதிய பயங்கரவாதத் தடைச் சட்டமே வேண்டாம் என்று வாதிட முற்பட்டால் அதற்கான வெளியக ஆதரவு இருக்கப் போவதில்லை. பயங்கரவாதத் தடைச் சட்டம் தொடர்பிலுள்ள அடிப்படையான பிரச்னை ஒன்றுதான் - அதாவது, அதனை ஒரு குறிப்பிட்ட இனத்துக்கு எதிராகவோ அல்லது அரசியல் பழிவாங்கல்களுக்காகவோ பயன்படுத்தக்கூடியவாறான பலவீனம் குறித்த சட்ட ஏற்பாட்டில் இருக்கக்கூடாது. அவ்வாறில்லாது நாட்டின் தேசிய பாதுகாப்பு என்னும் அடிப்படையில் ஒரு பயங்கரவாதத் தடைச் சட்டம் இருக்கக்கூடாது என்று வாதிட்டால், அது ஒரு பலவீனமான வாதமாகவே இருக்கும். ஏனெனில், ஈஸ்டர் தாக்குதலுக்கு பின்னரான சூழலில் அவ்வாறு வாதிடுவது புத்திசாதுர்யமானதும் அல்ல. தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் இந்த சந்தர்ப்பத்தைத் தவறவிட்டால், எதிர்காலத்தில் இவ்வாறானதொரு வாய்ப்பு வேறு அரசாங்கங்களுக்கு கிடைப்பதும் அரிதானது.

# புதிய கல்வி சீர்திருத்தத்திற்கு எதிராக கறுப்புப் பட்டி அணிந்து போராட்டம்

கொழும்பு, ஜன. 21

புதிய கல்விச் சீர்திருத்தங்களுக்கு எதிராக ஹோமாகம பிரதேச சபையின் எதிர்க்கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் உறுப்பினர்கள் சிலர் கறுப்புப் பட்டி அணிந்து நேற்று போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அந்தக் குழுவினர் ஹோமாகம வாராந்த சந்தைக்கு அருகில் ஒன்று கூடினர்.

அவ்விடத்திலிருந்து கறுப்புப் பட்டி அணிந்து எதிர்ப்புப் பதாகைகளை ஏந்தியவாறு ஹோமாகம பிரதேச சபை வரை ஊர்வலமாக சென்று, சபை அமர்வு மண்டபத்துக்குள்ளும் சென்று அங்கும் கோஷங்களை எழுப்பி தமது எதிர்ப்பை வெளியிட்டனர்.

இந்த போராட்டத்தில் ஐக்கிய மக்கள் சக்தி, பொது ஜன பெரமுன, சர்வஜன அதிகாரம், சுதந்திரக் கட்சி மற்றும் ஐக்கிய தேசியக் கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் உறுப்பினர்கள் இணைந்திருந்தனர். (அ)

## 2025 இல் அதிக போதைப்பொருள் பறிமுதல்!

கொழும்பு, ஜன. 21

இலங்கை வரலாற்றில் 2025ஆம் ஆண்டு, அதிக அளவு ஐஸ் மற்றும் ஹெரோயின் போதைப் பொருள் பறிமுதல் செய்யப்பட்ட ஆண்டாகப் பதிவாகியுள்ளது.

2025 ஆம் ஆண்டில் நடத்தப்பட்ட சோதனைகளில் பொலிஸார், கடற்படை மற்றும் பிற பாதுகாப்புப் படையினர் 1821 கிலோ 174 கிராம் ஹெரோயின் மற்றும் 3864 கிலோ கிராம் ஐஸ் ஆகியவற்றைக் கைப்பற்றியுள்ளனர்.

இந்த போதைப்பொருட்களின் மதிப்பு 100 பில்லியன் ரூபாய்க்கு மேல் இருக்கும் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

2025ஆம் ஆண்டுக்கு முன்னதாக 2019ஆம் ஆண்டில் அதிகளவு ஹெரோயின் பறிமுதல் செய்யப்பட்டிருந்தது.

அந்த ஆண்டு கைப்பற்றப்பட்ட ஹெரோயின் அளவு 1741 கிலோ 992 கிராம் ஆகும், 2025 க்கு முன்பு அதிகபட்சமாக 2024 ஆம் ஆண்டில் அதிகளவு ஐஸ் போதைப் பொருள் பறிமுதல் செய்யப்பட்டிருந்தது.

அப்போது 1364 கிலோ 254 கிராம் ஐஸ் போதைப் பொருள் பறிமுதல் செய்யப்பட்டிருந்தது. 2017 ஆம் ஆண்டில், 96 கிராம் ஐஸ் கைப்பற்றப்பட்டது. அந்த ஆண்டு முதல் ஐஸ் போதைப்பொருள் பறிமுதல் படிப்படியாக அதிகரித்து வருகிறது.

(அ)

## திருட்டு, ஊழலற்ற அபிவிருத்தியே அநுர அரசாங்கத்தின் எதிர்பார்ப்பு

### அமைச்சர் பிமல் ரத்நாயக்க

கொழும்பு, ஜன. 21

திருட்டு மற்றும் ஊழல் இல்லாமல் நாட்டின் அபிவிருத்தி நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்வதே தற்போதைய அரசாங்கத்தின் எதிர்பார்ப்பு என்று போக் குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

"பாலதக்ஷ மாவத்தை" மேம்பாலத்தை மக்கள் பாவனைக்கு கையளிக்கும் நிகழ்வில் கலந்துகொண்ட போதே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

திருடியும், வீண்விரயம் செய்தும் நாட்டை அழித்தமையாலும், நாட்டை வங்குரோத்து அடையச்செய்தமையாலும் ஏற்பட்ட பொருளாதாரக் குற்றங்களின் சாபத்திற்கு முழு நாடும் முகங்கொடுக்க நேரிட்டுள்ளது. நாங்கள் அந்த சவால்களை வெற்றிக்கொண்டு, திருட்டு மற்றும் ஊழல் இல்லாமல் அபிவிருத்தி நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்கிறோம்-என்றார்.

(அ)

## இ.போ.ச சாரதிக்கு ஒரு வருட கடூழியச் சிறை!

கொழும்பு, ஜன. 21

ஓடுவதற்கு தகுதியற்ற இலங்கை போக்குவரத்துச் சபைக்கு சொந்தமான பேருந்து ஒன்றை குறுகிய வீதியில் செலுத்தி நபர் ஒருவரின் மரணத்திற்குக் காரணமாக இருந்த குற்றச்சாட்டில் குற்றவாளியாகக் காணப்பட்ட கெபிற்றிக்கொல்லாவ டிப்போவைச் சேர்ந்த பேருந்து சாரதியொருவருக்கு நீதிமன்றம் ஒரு வருடம் கடூழியச் சிறைத்தண்டனை விதித்துள்ளது.

இதற்கு மேலதிகமாக 15,000 ரூபா அபராதமும், உயிரிழந்தவரின் தரப்பினருக்கு 5 இலட்சம் ரூபா நஷ்டஈடும் செலுத்துமாறு கெபிற்றிக்கொல்லாவ நீதவான் நீதிமன்றம் பிரதிவாதியான சாரதிக்கு உத்தரவிட்டுள்ளது.


2017 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 8 ஆம் திகதி ஓடுவதற்கு தகுதியற்ற இ.போ.ச பேருந்து ஒன்றை குறுகிய வீதியில் கவனயீனமாகச் செலுத்தி நபர் ஒருவரின் மரணத்தை ஏற்படுத்தியமை உள்ளிட்ட 05 குற்றச்சாட்டுகளின் கீழ் குறித்த இ.போ.ச சாரதிக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

அந்த வழக்கின் தீர்ப்பை வழங்கி, குறித்த குற்றச்சாட்டுகளுக்கு பிரதிவாதி குற்றவாளி எனத் தீர்ப்பளித்த கெபிற்றிக்கொல்லாவ நீதவான் நீதிமன்றம், அவருக்கு கடூழியச் சிறைத் தண்டனை, அபராதம் மற்றும் நஷ்டஈடு ஆகியவற்றை விதித்துள்ளது.

அத்துடன், பிரதிவாதியான இ.போ.ச சாரதியின் சாரதி அனுமதிப்பத்திரத்தை ஒரு வருடத்திற்கு இடைநிறுத்தவும் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

(அ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**மேடம்**

தவறு செய்பவர்களை தட்டிக் கேட்பீர்கள். உங்களிடம் பழகும் உறவினர்களின் பலம் பலவீனத்தை உணர்வீர்கள். சக ஊழியர்களின் ஆதரவால் நினைத்ததை முடிப்பீர்கள். முயற்சிகள் பலிதமாகும் நாள்.

**இடபம்**

கணவன்-மனைவிக்குள் நெருக்கம் உண்டாகும். வியாபாரத்தில் வேலையாட்களை தட்டிக் கொடுத்து வேலை வாங்குவீர்கள். உத்தியோகத்தில் இழந்த உரிமையை பெறுவீர்கள். மகிழ்ச்சியான நாள்.

**மிதுனம்**

சந்திராஷ்டமம் இருப்பதால் திடீர் திடீரென்று எதையோ இழந்ததைப் போல் இருப்பீர்கள். இடர்பாடுகளை சமாளிக்க வேண்டியது வரும். நேர்மறை எண்ணங்கள் தேவைப்படும் நாள்.

**கடகம்**

உற்சாகமாக எதையும் முன்னின்று செய்வீர்கள். வியாபாரத்தில் புகழ் பெற்ற நிறுவனத்துடன் புது ஒப்பந்தம் செய்வீர்கள். உத்தியோகத்தில் மேலதிகாரி மதிப்பார். தன்னம்பிக்கை துளிர்விடும் நாள்.

**சிம்மம்**

சாமர்த்தியமாகவும் சாதுர்யமாகவும் பேசி சாதிப்பீர்கள். பணப்புழக்கம் அதிகரிக்கும். வியாபாரத்தில் வாடிக்கையாளர்கள் எண்ணிக்கை அதிகரிக்கும். அதிகாரிகள் முன்னுரிமை தருவார்கள். ள்.

**கன்னி**

புதிய சிந்தனைகள் மனதில் தோன்றும். பிள்ளைகளின் உயர்கல்வி உத்யோகம் குறித்து யோசிப்பீர்கள். வியாபாரத்தில் வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும். புதிய சலுகைகள் கிடைக்கும்.

**துலாம்**

முக்கிய பிரமுகர்களை சந்திப்பீர்கள். புதுவேலை கிடைக்கும். வியாபாரத்தில் சலுகைகள் மூலம் லாபமடைவீர்கள். சக ஊழியர்களின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். எதிர்பார்ப்புகள் பூர்த்தியாகும் நாள்.

**விருட்சிகம்**

குடும்பத்தினருடன் கலந்தாலோசித்து பழைய பிரச்னைகளுக்கு முக்கிய தீர்வு காண்பீர்கள். வியாபாரத்தில் போட்டிகளை எதிர்கொண்டு வெற்றி காண்பீர்கள். நினைத்ததை முடிக்கும் நாள்.

**தனுசு**

குடும்பத்தாரின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். கைமாற்றாக வாங்கியிருந்த பணத்தை திருப்பித் தருவீர்கள். புது நட்பு மலரும். எபணி களை விரைந்து முடிப்பீர்கள். தடைகள் உடைப்படும் நாள்.

**மகரம்**

ராசிக்குள் சந்திரன் இருப்பதால் ஒருவித படபடப்பு வந்து செல்லும். உத்தியோகத்தில் சக ஊழியர்களுடன் பணிப்போர் வந்து நீங்கும். இடம் பொருள் ஏவல் அறிந்து செயல்பட வேண்டிய நாள்.

**கும்பம்**

கணவன்-மனைவிக்குள் வீண் விவாதம் வந்து செல்லும். வியாபாரத்தில் கடினமாக உழைத்து லாபம் பெறுவீர்கள். மறைமுக பிரச்சினைகள் வந்து விலகும். எதிலும் கவனம் தேவைப்படும் நாள்.

**மீனம்**

குடும்பத்தாரின் எண்ணங்களை கேட்டறிந்து பூர்த்தி செய்வீர்கள். வியாபாரத்தில் புதுத் தொழில் தொடங்கும் முயற்சி வெற்றி அடையும். உத்தியோகத்தில் பாராட்டப்படுவீர்கள். சிறப்பான நாள்.

# பதிலீடுகளற்ற ஆசிரியர் இடமாற்றத்தால் மாணவர்களின் கல்வி மிகவும் பாதிப்பு

## திலகநாதன் எம். பி. குற்றச்சாட்டு

முல்லைத்தீவு, ஜன. 21

பதிலீடுகளற்ற ஆசிரியர் இடமாற்றங்களால் முல்லைத்தீவு மாணவர்களின் கல்வி மிகவும் பாதிப்படைந்துள்ளது என்று ஆளுங்கட்சி வன்னி பாராளுமன்ற உறுப்பினரும் முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்திக் குழு உறுப்பினருமான செ. திலகநாதன் குற்றஞ்சாட்டியுள்ளார்.

முல்லைத்தீவு, ஒட்டுசுட்டான் பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட 27 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளிலும் இருந்து தெரிவுசெய்யப்பட்ட பிரஜாசக்தி வறுமை ஒழிப்பின் சமூக அபிவிருத்திக் குழு தலைவர்களுக்கான நியமனம் வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் ஒட்டுசுட்டான் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது. இதில், கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"நாங்கள் செல்லுமிடமெங்கும் பாடசாலைகளில் ஆசிரியர் பற்றாக்குறை காணப்படுவதாக பெற்றோர்கள் தொடர்ச்சியாக முறையிடுகிறார்கள். கடந்த வருடம் வன்னி மாவட்டத்திலிருந்து ஆசிரியர்கள், யாழ். மாவட்டத்துக்கு பதிலீட்டில் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர். இதில், பெரும் தவறு நடந்துள்ளது

வன்னி மாவட்டத்திலிருந்து ஆசிரியர்களை யாழ். மாவட்டத்துக்கு அனுப்பிய பின்னர் வன்னி மாவட்டத்துக்கு ஆசிரியர்களை நியமிக்காமல் ஏமாற்று நாடகம் நடந்துள்ளது. இதனை சட்டத்தின் அடிப்படையில் பார்த்தால் வன்னி மாவட்டத்துக்கு ஆசிரியர்களை வழங்கிய பின்னரே யாழ். மாவட்டத்துக்கு எடுத்திருக்க வேண்டும். இது தவறான செயல்பாடு. தவறு செய்தவர்கள் குற்றவாளிகள்.

தொடர்ந்து இவ்வாறான குற்றவாளிகள் வடக்கு மாகாணத்திலிருந்து எமது வன்னிப் பிரதேசத்தின் கல்வியையும் வடக்கு மாகாணத்தின் கல்வியையும் சீரழித்துக் கொண்டிருக்கும் செயல்பாடு நீடிக்கிறது.

எதிர்வரும் காலங்களில் ஜனாதிபதியின் வழிகாட்டலின் கீழ் இவ்வாறான தவறுகள் இடம் பெறாது செய்வதற்கு பிரஜா சக்தி வறுமை ஒழிப்பின் சமூக அபிவிருத்தி தலைவர்களை நியமிப்பதன் ஊடாகவும் பல்வேறு குழுக்களை அமைப்பதன் ஊடாகவும் பல புத்திஜீவிகளை கொண்ட அமைப்புகளை உருவாக்குவதன் மூலமும் தவறுகளை களையமுடியும். இதன் ஆரம்ப பணியாகவே பிரஜா சக்தியினுடைய தலைவர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். இந்த நியமனம் ஊடாக பாரிய பொறுப்புகள் ஒப்படைக்கப் பட்டுள்ளன. இதனை செவ்வனே செய்து எமது பிரதேசத்தை அபிவிருத்தி செய்வீர்கள்"- என்றார்.

(எ)

# "அரசாங்கம் கொண்டுவரும் புதிய சட்டம் ஆபத்தானது"

யாழ்ப்பாணம், ஜன. 21

பயங்கரவாத தடைச் சட்டத்துக்கு மாற்றாக அரசாங்கம் கொண்டுவரும் புதிய சட்டம் மிகவும் ஆபத்தானது என்று சமூக செயல்பாட்டாளர் இ. முரளிதரன் தெரிவித்தார்.

நேற்று ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

பயங்கரவாத தடைச் சட்டத்துக்கு மாற்றாக அரசாங்கம் பெப்ரவரி மாதம் ஒரு புதிய சட்டத்தை கொண்டு வருகிறது. இது தற்போது இருக்கும் பயங்கரவாத தடைச் சட்டத்தை விட மிக மோசமான சட்டமாகவே இது காணப்படுகிறது.

இந்த சட்டம் மக்களுடைய பார்வைக்காக வெளியிடப்பட்டு நீதி அமைச்சால் மக்களின் கருத்து கேட்கப்பட்டுள்ளது.

இந்த சட்டம் தொடர்பில் முடிவெடுக்க வேண்டியவர்கள் மூன்று பேர் தான். ஜனாதிபதி, நீதியரசர், பாதுகாப்பு அமைச்சர் இவர்களைத் தவிர வேறு யாரும் இது தொடர்பில் முடிவெடுக்க முடியாது. ஆகவே இந்த சட்டம் மிக மோசமான ஒரு சட்டமாகவே காணப்படுகிறது.

400 பக்கங்களைக் கொண்ட இந்த சட்டம் மிக மோசமாக காணப்படுகிறது. நாங்கள் ஒரு ஊடக சந்திப்பை கூட செய்ய முடியாத நிலைமை இந்த சட்டத்தில் காணப்படுகிறது. இந்த சட்டம் நிறைவேற்றப்படுமாக இருந்தால் இலங்கையில் கருத்து சுதந்திரம் பாதிக்கப்படும்.

இந்த அரசாங்கம் போராட்டங்கள் ஊடாகத்தான் ஆட்சியை கைப்பற்றியது. அந்த நிலை தன்னுடைய அரசாங்கத்துக்கும் ஏற்படும் எனத் தெரிந்துதான் இவ்வாறு ஒரு பயங்கரமான சட்டத்தை கொண்டு வருகிறது.

அரசாங்கத்தை விமர்சிக்க தடை ஏற்படுத்தி அரசாங்கத்தை நீண்ட காலம் தக்க வைத்துக் கொள்வதற்காகவே இந்த சட்டம் கொண்டுவரப்படுவதாக நான் கருதுகிறேன். இந்தச் சட்டத்தை எதிர்ப்பதற்கு தென்னிலங்கையில் பொது அமைப்புகள், புத்துஜீவிகள் தயாராகி வருகின்றனர்.

எதிர்வரும் நாட்களில் பாரிய போராட்டங்களை நீதி அமைச்சு முன்னால் மேற்கொள்ளவுள்ளனர். இந்த போராட்டம் வடக்கு - கிழக்கிலும் விஸ்தரிக்கப்பட வேண்டும். - என்றார். (எ-05)

# கரையோரங்களில் குப்பைகளை அகற்ற சங்கங்கள் ஒத்துழைப்பு வழங்கவில்லை

## பருத்தித்துறை பிரதேச சபை தவிசாளர் கவலை

யாழ்ப்பாணம், ஜன. 21

யாழ்ப்பாணம் - வடமராட்சி கிழக்கு கரையோரங்களில் காணப்படும் குப்பைகளை அகற்றுவதற்கு கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்கங்களின் சமாசம் மற்றும் சங்கம் ஒத்துழைப்பு வழங்கவில்லை என்று பருத்தித்துறை பிரதேச சபை தவிசாளர் யுகதீஸ் குற்றஞ்சாட்டியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

"அண்மையில் ஏற்பட்ட டித்வா புயலினால் வடமராட்சி கிழக்கு கரையோர பகுதிகளில் அதிகளவான குப்பைகள் தேங்கிக் காணப்படுகின்றன.

இவற்றை அகற்ற வேண்டும் என்று மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். ஆனால், இவ்வளவு கணக்கில் தேங்கிக் காணப்படும் இந்தக் குப்பைகளை அகற்ற வேண்டும் என்று சொன்னால் பிரதேச சபையால் மட்டும் முடியாது. எனவே, பிரதேச சபையுடன் வடமராட்சி கிழக்கு கடற்றொழிலாளர் சமாசம் மற்றும் சங்கங்கள் இணையுமாறு பிரதேச சபையால் கடிதம் அனுப்பப்பட்டது.

ஆனால், வடமராட்சி கிழக்கு சமாசமோ, சங்கங்களோ இந்தப் பணியில் ஈடுபடவில்லை"- என்றார்.

இதேவேளை, வடமராட்சி கிழக்கு கரையோரத்தில் தேங்கிக் காணப்படும் குப்பைகள் பருத்தித்துறை பிரதேச சபையால் கட்டம் கட்டமாக அகற்றப்பட்டு வருகின்றது. (எ-05)

# மயிலணியில் சொற்பொழிவு

யாழ்ப்பாணம், ஜன. 21

சுன்னாகம் மயிலணி திருவருள்மிகு சிறீ முத்துமாரி அம்பாள் (வடலியம்மன்) திருக்கோயில் வருடாந்த மஹோற்சவத்தை முன்னிட்டு சைவ வாழ்வியலில் கிரியைகள், சடங்குகளின் முக்கியத்துவம் என்னும் தொனிப்பொருளில் சிறப்புச்சொற்பொழிவு

கோவில் பிரதான மண்டபத்தில் நாளை மறுதினம் 23 ஆம் திகதி வெள்ளிக்கிழமை தொடக்கம் எதிர்வரும் 31 ஆம் திகதி வரை தினமும் காலை 11. 00 மணிக்கு நடைபெறவுள்ளது. சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் இந்த சொற்பொழிவு நடைபெறவுள்ளது.

மயிலணி சிறீ முத்துமாரி அம்பாள் கோவில் பிரதமகுரு சிவசிறீ நா. சிவசங்கரக்குருக்களின் ஆசியுரையைத் தொடர்ந்து சொற்பொழிவினை சைவப்புலவர்கள் கந்த. சத்தியதாசன், சி. கா. கமலநாதன், செ. த. குமரன், பொன். சந்திரவேல், ஏ. அனுசாந்தன், க. கைலநாதனும் இளஞ்சைவப் புலவர்கள் ச. நவநீதன், க. கயிலைவாசன் ஆகியோர் ஆன்மீகவுரை ஆற்றவுள்ளனர். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போதைப்பொருள் ஒழிப்புக்காக அரசின் விசேட திட்டம் அறிமுகம்

**பொலிஸ் பொறுப்பதிகாரிகளுக்கு நேரடியாக தகவல் வழங்க ஏற்பாடு**

கொழும்பு, ஜன. 21

சட்டவிரோத போதைப்பொருள் விநியோகம் தொடர்பாக பிரதேச பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகளுக்கு பொதுமக்கள் நேரடியாக தகவல்களை வழங்குவதற்குரிய திட்டம் நாடளாவிய ரீதியில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

ஹெரோயின், ஐஸ், கொக்கொய்ன் மற்றும் கஞ்சா உள்ளிட்ட சட்டவிரோத போதைப் பொருட்களை குறிவைத்து உளவுத்துறை தலைமையிலான நடவடிக்கைகளை வலுப்படுத்துவதே இந்த முயற்சியின் நோக்கம் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வழங்கப்பட்டுள்ள தொலைபேசி துரித எண்களின் மூலம் பொதுமக்கள் நம்பகமான தகவல்களை நேரடியாக தொடர்புடைய பிரதேச பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகளுக்கு தெரிவிக்கமுடியும்.

அதன்படி, ஒவ்வொரு பொலிஸ் பிரிவுக்கும் வெளியிடப்பட்ட தொலைபேசி எண்களைப் பயன்படுத்தி துல்லியமான மற்றும் நம்பகமான தகவல்களை வழங்க பொதுமக்கள் ஊக்குவிக்கப்படுகிறார்கள்.

தகவல் அளிப்பவர்களின் அடையாளங்கள் பெறப்படும் என்பதோடு அனைத்து தகவல்களும் மிகவும் இரகசியமாக பாதுகாக்கப்படும் என்றும், தொழில்முறை முறையில் கையாளப்படும் என்றும் பொலிஸார் உறுதியளித்துள்ளனர். (அ)

போதை வியாபாரியுடன் தொடர்பு;

## 28 கோடி ரூபாவுக்கும் அதிக பணம் இரு வாகனங்களுடன் ஒருவர் கைது!

கொழும்பு, ஜன. 21

சட்டவிரோதமாக ஈட்டப்பட்டதாக சந்தேகிக்கப்படும் 28 கோடியே 33 இலட்சம் ரூபா பணம் மற்றும் இரண்டு வாகனங்களுடன் சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சட்டவிரோத சொத்துக்கள் விசாரணைப் பிரிவின் அதிகாரிகளால் நேற்று முன்தினம் திங்கட்கிழமை மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பின் போது இந்த நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர் இப்பாகமுவ பிரதேசத்தைச் சேர்ந்த 40 வயதானவர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

வெளிநாட்டில் மறைந்திருப்பதாக சந்தேகிக்கப்படும் போதைப் பொருள் கடத்தல்காரர் ஒருவருடன் இந்த சந்தேக நபர் தொலைபேசி மூலம் தொடர்புகளை பேணி, அக்கடத்தல்காரரின் ஆலோசனையின் பேரில், இந்நாட்டிலுள்ள போதைப்பொருள் கடத்தல்காரர்களிடமிருந்து இப்பணத்தை சேகரித்துள்ளதாக ஆரம்பக்கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

அத்துடன், போதைப்பொருள் கடத்தல் மூலம் ஈட்டப்பட்ட பணத்தினால் குறித்த வாகனங்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளதாகவும் இதுவரை மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது. (அ)

# தரம் 6 ஆங்கில பாட புத்தக விவகாரம்: கல்வி அதிகாரிகள் பணி இடைநீக்கம்!

கொழும்பு, ஜன. 21

தரம் 6 ஆங்கில மொழி பாடத்திட்டம் குறித்த சர்ச்சை தொடர்பில் தேசிய கல்வி நிறுவகத்தின் பிரதிப் பணிப்பாளர் நாயகம் தர்ஷன சமரவீர கட்டாய விடுப்பில் அனுப்பப்பட்டுள்ளார்.

இதே பிரச்சினை தொடர்பாக மேலும் இரண்டு தேசிய கல்வி நிறுவகத்தின் அதிகாரிகளும் இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

முன்னதாக, தேசிய கல்வி நிறுவகத்தின் பணிப்பாளர் ஜெனரல் பேராசிரியர் மஞ்சுளா விதானபத்திரண, உள் விசாரணையின் முடிவு வரும் வரை தனது பதவியில் இருந்து விலகினார்.

பொருத்தமற்ற வலைத்தளத்தைப் பற்றிய குறிப்பை உள்ளடக்கிய உள்ளடக்கம் உறுதிசெய்யப்பட்டதை அடுத்து, புதிதாக அச்சிடப்பட்ட 6 ஆம் தர ஆங்கில பாடப் புத்தகத்தின் விநியோகத்தை கல்வி அமைச்சு நிறுத்தி வைத்தது.

தேசிய கல்வி நிறுவகம் தயாரித்து ஏற்கனவே அச்சிடப்பட்ட இந்தப் பாடப்புத்தகம் குறித்த முறையான முறைப்பாட்டைத் தொடர்ந்து ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. (அ)

## மோசமான நிலையில் காற்றின் தரம்!

கொழும்பு, ஜன. 21

நாட்டின் சில பகுதிகளில் காற்றின் தரத்தில் சரிவு காணப்படுவதாக மத்திய சுற்றுச்சூழல் அதிகாரசபையின் ஊடகப் பேச்சாளர் கலாநிதி அஜித் குணவர்தன தெரிவித்துள்ளார்.

அதன்படி, நேற்று முன்தினம் முதல் நாட்டின் வடக்கு, வடமத்திய, வடமேற்கு, மேற்கு மற்றும் தெற்கு மாகாணங்களிலும், இரத்தினபுரி மற்றும் கேகாலை மாவட்டங்களிலும் இந்த எண்ணிக்கை 150 முதல் 200 வரை இருப்பதாக அவர் கூறினார்.

இது ஓரளவு சாதகமற்ற சூழ்நிலை என்றும், அடுத்த 2 நாட்களுக்குள் இந்த நிலைமை சீரடையும் என்று எதிர்பார்க்கப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

சர்வதேச எல்லைகளுக்கு இடையிலான காற்று சுழற்சியே இந்த நிலைமைக்கு காரணம் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

# வடக்கில் ஒன்றையும் தெற்கில் வேறொன்றையும் பேசக்கூடாது!

**கூறுகிறார் சாமர சம்பத் தஸநாயக்க**

கொழும்பு, ஜன. 21

"வடக்கில் ஒன்றையும், தெற்கில் வேறொன்றையும் பேசி நாட்டில் மாற்றத்தை ஏற்படுத்தலாம் என நினைப்பது தவறு. நாட்டில் இன்று இனவதாம் இல்லை."

-இவ்வாறு சுதந்திரக் கட்சியின் புதிய தேசிய அமைப்பாளர் , பாராளுமன்ற உறுப்பினர் சாமர சம்பத் தஸநாயக்க தெரிவித்தார்.

சுதந்திரக்கட்சியின் தேசிய அமைப்பாளராக நியமிக்கப்பட்டுள்ள அவரை வரவேற்கும் நிகழ்வு நேற்று முன்தினம் பதுளையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

சிறீமாபோதிக்கு அப்பால் சென்று வழிபடவேண்டாம் என ஜனாதிபதி கூறுகின்றார். வடக்கில் ஒன்றையும், தெற்கில் வேறொன்றையும் கூறி நாட்டை மாற்றலாம் என ஜனாதிபதி நினைக்கின்றார் போலும்.

நாட்டில் இன்று இனவாதம் என்பது வடக்கிலும் இல்லை, தெற்கிலும் இல்லை. எனவே, இரு வேறு பகுதிகளில் இருவேறு விதத்தில் கதைக்க வேண்டியதில்லை.

ரயில் வீதியில் விழுந்த மண்ணை அகற்றிவிட்டுகூட நிகழ்வு நடத்தும் நிலைதான் தற்போதைய ஆட்சியின்கீழ் காணப்படுகின்றது-என்றார். (அ)

# குளிரான காலநிலை காரணமாக வைரஸ் தொற்றுக்கள் அதிகரிப்பு!

கொழும்பு, ஜன. 21

இலங்கையில் நிலவும் குளிர் காலநிலையுடன் பல வைரஸ் நோய்கள் பரவுவதில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதாக சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்த நோய்கள் குறிப்பாக இளம் சிறுவர்களிடையே பரவலாகக் காணப்படுவதாக கம்பஹா வைத்தியசாலையின் சிரேஷ்ட வைத்திய அதிகாரி வைத்தியர் ரவீந்திர உடகமகே குறிப்பிட்டார்.

குளிர் மற்றும் வறண்ட வானிலை பல்வேறு வைரஸ் தொற்றுகள் விரைவாகப் பரவுவதற்கு பங்களிக்கின்றன.

இது பிரதானமாக மேல் சுவாசக் குழாயைப் பாதிக்கிறது.

எனவே, காய்ச்சல், இருமல், சளி, தொண்டை வலி, கடுமையான தலைவலி, தசை வலி, வாந்தி மற்றும் வயிற்றுப்போக்கு ஆகிய அறிகுறிகள் மூன்று நாட்களுக்கு மேல் நீடித்தால் அல்லது நோயாளிகள் சுவாசிப்பதில் சிரமத்தை அனுபவித்தால் உடனடியாக மருத்துவ உதவியை நாட வேண்டும் என்று அவர் மேலும் அறிவுறுத்தினார்.

இதற்கிடையில், நாடு முழுவதும் காற்றின் தர அளவு தற்போது குறைவாகவே இருப்பதாக மத்திய சுற்றுச்சூழல் ஆணையகம் குறிப்பிட்டது.

அடுத்த இரண்டு நாட்களுக்குள் நிலைமை மேம்பட்டு குறையும் என்று எதிர்பார்க்கப்படுவதாக மத்திய சுற்றுச்சூழல் ஆணையக செய்தித் தொடர்பாளர் அஜித் குணவர்தன குறிப்பிட்டார். (அ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொலிஸ் நிலையம் என்பது வியாபாரம் செய்யும் இடமல்ல

## பிரதி பொலிஸ் மா அதிபர் சுஜித் வேதமுல்ல தெரிவிப்பு



கல்முனை, ஜன. 21

பொதுமக்கள் பொலிஸாருக்கு பணம் கொடுத்து வேலைகளை முடித்துக் கொள்ளும் கலாசாரத்தை நிறுத்த வேண்டும். பொலிஸ் நிலையம் என்பது வியாபாரம் செய்யும் இடம் கிடையாது- என்று அம்பாறை மாவட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் சுஜித் வேதமுல்ல தெரிவித்தார்.

அம்பாறை மாவட்டத்தின் கல்முனை, சம்மாந்துறை, சவளக்கடை, பெரிய நீலாவணை, சாய்ந்தமருது உள்ளிட்ட பகுதிகளில் சமூக பொலிஸ் கட்டமைப்பை வலுப்படுத்துவது தொடர்பான விசேட நிகழ்வு ஞாயிற்றுக்கிழமை பெரிய நீலாவணை பகுதியில் அமைந்துள்ள கலாசார மண்டபத்தில் நடைபெற்றது.

இதில், அம்பாறை மாவட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் சுஜித் வேதமுல்ல மற்றும் அம்பாறை மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் கே.டி. வி. கஸ்தூரியாராச்சி ஆகியோர் முதன்மை விருந்தினர்களாக கலந்து கொண்டனர். இந்த நிகழ்வில் அவர் மேலும் கூறுகையில்,

"பொதுமக்கள் பொலிஸாருக்கு பணம் கொடுத்து வேலைகளை முடித்துக் கொள்ளும் கலாசாரத்தை நிறுத்த வேண்டும். பொலிஸ் நிலையம் என்பது வியாபாரம் செய்யும் இடம் கிடையாது. அது பொதுமக்களுக்கு பாதுகாப்பையும் சிவில் சட்டங்களையும் நடைமுறைப் படுத்தும் திணைக்களமாகும். சாதாரணமாக கூலி வேலை செய்பவரிடமிருந்தும் கோடீஸ்வரர்களிடமிருந்தும் கிடைக்கும் வரிப் பணத்தில்தான் நாம் சம்பளத்தை பெறுகின்றோம். இனவாதம், மதவாதம் போன்ற வேறுபாடுகள் தலைதூங்குவதற்கு இடமளிக்கக் கூடாது. எல்லோரும் இலங்கை வாழ் மக்கள் என்ற ரீதியில் நாம் பணியாற்றுவதற்குத் தயாராக இருக்கிறோம்.

எனவே, பொலிஸாரோடு இணைந்து பணியாற்றும் நீங்கள் சமூகத்துக்காக விரும்பி வந்து பணியாற்றுகின்றீர்கள். உங்களது சேவையை நாம் பெரிதும் மதிக்கிறோம்"- என்றார்.

(எ-01)

# மருத்துவர்கள் பகிஷ்கரிப்பு: நோயாளர்கள் கடும் அவதி!

## மட்டக்களப்பு மருத்துவமனையில் நீண்ட நேரம் காத்திருந்த மக்கள்



மட்டக்களப்பு, ஜன. 21

கிழக்கு மாகாணத்தில் உள்ள மருத்துவமனைகளில் நேற்று முன்தினம் தொடக்கம் மருத்துவர்கள் பணிப்பகிஷ்கரிப்பினை முன்னெடுத்துள்ளனர். இதன் காரணமாக மருத்துவ சேவைகள் பாதிக்கப்பட்டன. இதனால், மருத்துவமனைக்கு வருகைதந்த மக்கள் பல்வேறு கஷ்டங்களை எதிர்நோக்கினர்.

அக்கரைப்பற்று ஆதார மருத்துவமனையின் அத்தியட்சகரை பதவி நீக்கம் செய்து பக்கச்சார்பற்ற விசாரணையை முன்னெடுக்குமாறு கோரி தொடர்ச்சியான போராட்டங்கள் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தால் முன்னெடுக்கப்பட்டுவந்த நிலையில் நேற்று முன்தினம் பணிப்பகிஷ்கரிப்பு முன்னெடுக்கப்பட்டது.

மருத்துவர்களின் பணிப்பகிஷ்கரிப்பு காரணமாக மட்டக்களப்பு போதனா மருத்துவமனையின் சேவைகள் கடுமையாக பாதிக்கப்பட்டன.

மட்டக்களப்பு போதனா மருத்துவமனையின் ஆரம்ப மருத்துவ சேவை பிரிவு மற்றும் கிளினிக் சேவைகளில் மருத்துவர்கள் வருகைதராத காரணத்தால் பல்வேறு பகுதிகளிலும் இருந்து வருகைதந்த மக்கள் பல்வேறு கஷ்டங்களை எதிர்நோக்கினர்.

நேற்று முன்தினம் காலை முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ள இந்த பணிப்பகிஷ்கரிப்பு போராட்டம் தமது கோரிக்கைக்கான சாதகமான தீர்வு கிடைக்கும் வரையில் தொடரும் என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் மட்டக்களப்பு மாவட்ட கிளையினர் தெரிவித்தனர். (எ)

# திருமலைக்கு இடமாற்றுவது பழிவாங்கும் செயல்பாடாகும்

## அம்பாறை, மட்டு. அரச அலுவலர்கள் ஆதம்பாவா எம். பியிடம் முறைப்பாடு

அம்பாறை, ஜன. 21

கிழக்கு மாகாணத்தில் கடந்த 20 ஆண்டுகளாக நிரந்தரமாக சேவையாற்றிய எங்களை "மேலதிகம்" என்று கூறி இந்த வயதில் திருகோணமலைக்கு இடமாற்றுவது பழிவாங்கலாகும் என்று தேசிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர் ஏ. ஆதம்பாவாவிடம் பாதிக்கப்பட்ட அம்பாறை - மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் முறைப்பாடு செய்துள்ளனர்.

கிழக்கு மாகாணத்தில் 2005 ஆம் ஆண்டுக்கு முன்னர் முறைப்படி பரீட்சை மூலம் நியமனம் பெற்று ஆளணிக்கேற்ப கடந்த 20 வருடங்களுக்கு மேலாக நிரந்தரமாக பணியாற்றி வரும் மட்டக்களப்பு மற்றும் அம்பாறை மாவட்டங்களைச் சேர்ந்த 44 அபிவிருத்தி உத்தியோகத்தர்களை திருகோணமலைக்கு இடமாற்றும் உத்தரவு, கிழக்கு மாகாண பிரதிப் பிரதம செயலாளரால் ஒப்பமிடப்பட்டு வெளியாகியுள்ளது.

இதில், இடமாற்ற விதிகளை மீறி தாங்கள் இடமாற்றப்பட்டுள்ளதாக 44 அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் கவலையுடன் மன உளைச்சலுக்கு மத்தியில் முறைப்பாட்டை கூறியுள்ளனர்.

இவ் இடமாற்றம் 2026 ஜனவரி 16 ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் வெளியிடப்பட்டுள்ளது.

இதன்படி, சம்பந்தப்பட்ட அலுவலர்கள் தங்களது தற்போதைய பணியிடங்களிலிருந்து புதிய பணியிடங்களுக்கு உடனடியாக மாற்றம் செய்யப்படவுள்ளனர்.

புதிய பணியிடங்களில் கடமையை ஏற்கத் தவறினால், அது சேவை ஒழுங்கு விதிகளின் கீழ் நடவடிக்கைக்கு உட்படுத்தப்படும் எனவும் அதிகாரிகள் எச்சரித்துள்ளனர்.

இந்த நிலையில், பாராளுமன்ற உறுப்பினர் ஏ. ஆதம்பாவாவுடனான சந்திப்பு அவரது மாளிகைக்காடு அலுவலகத்தில் நடைபெற்றது.

இதன்போது மகஜரை கையளித்த அலுவலர்கள் கூறுகையில்,

"நாம் முறைப்படி ஆளணிக்கேற்ப நியமிக்கப்பட்டவர்கள். மேலதிக ஆளணி என்று நாம் நியமிக்கப்படவில்லை. நாம் நிரந்தரமானவர்கள்.

தற்போது மட்டும் எங்களை எப்படி "மேலதிகம்" என்ற வகுதிக்குள் பிரித்து பார்க்க முடியும்.

கிழக்கில் இன்னும் பல்லாயிரக்கணக்கான அரச ஊழியர்கள் ஒரே இடத்தில் பணியாற்றி வருகின்றார்கள். அவர்கள் பற்றி அலட்டிக் கொள்ளாத நிர்வாகம், எங்களை மட்டும் மேலதிகம் என்று கூறி 46 - 56 வயதுடைய குடும்பஸ்தர்களான எங்களை இன்றைய பொருளாதார இறுக்கம் நிறைந்த காலகட்டத்தில் திருகோணமலைக்கு இடமாற்றுவது என்பது பொருத்தமல்ல.

அரச இடமாற்றம் வழமையானதுதான். ஆனால், எமது விடயத்தில் மனிதாபிமானம்- சட்ட நடைமுறை விதிகள் மீறப்பட்டுள்ளன- என்றனர். (எ-09)

# ஹற்றன் மல்லிகைப்பூ வனப்பகுதி தீக்கிரை!

ஹற்றன், ஜன. 21

ஹற்றன்- மல்லிகைப்பூ வனப் பகுதியில் இனந்தெரியாத நபர்களால் வைக்கப்பட்ட தீ காரணமாக பல ஏக்கர் வனப்பகுதி தீக்கிரையானது.

இந்தத் தீப்பரவல் காரணமாக இலங்கைக்கே உரித்தான அரிய வகை தாவரங்கள், மூலிகைச் செடிகள் மற்றும் சிறிய உயிரினங்கள் அழிவடைந்தன.

தற்போது மலையகப்பகுதியில் நிலவும் கடும் வறட்சியான காலநிலை மற்றும் கடும் காற்று காரணமாக தீ வேகமாகப் பரவியுள்ளது. இதனால், தீயினைத் தணிப்பதில் பெரும் சிரமம் ஏற்பட்டதாக பாதுகாப்பு பிரிவினர் தெரிவித்தனர்.

எனினும், இரவு வேளையில் ஏற்பட்ட பனிப்பொழிவு காரணமாக தற்போது தீ தானாகவே கட்டுப்பாட்டுக்குள் வந்துள்ளது.

பொழுதுபோக்கிற்காகவோ, விலங்குகளை வேட்டையாடுவதற்காகவோ அல்லது விறகு சேகரிப்பதற்காவோ மர்ம நபர்களால் தீ வைக்கப்பட்டிருக்கலாம் என சந்தேகிக்கப்படுகிறது.

மலையகப்பகுதியில் வறட்சியான காலங்களில் காடுகளுக்குத் தீ வைக்கப்படுவதனால், நீரூற்றுக்கள் வற்றிப்போய்க் குடிநீர் தட்டுப்பாடு ஏற்படுவது தொடர்கதையாகி வருகிறது. எனவே, இவ்வாறான சட்ட விரோத செயல்களில் ஈடுபடுபவர்களை உடனடியாக கைது செய்து சட்டத்தின் முன் நிறுத்த வேண்டும் என்று பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.(எ)

# "காணி விடுவிப்பு குறித்து எந்தவித இணக்கப்பாடும் எட்டப்படவில்லை"

மட்டக்களப்பு, ஜன. 21

காணி விடுவிப்பு தொடர்பில் நாங்கள் பேசியபோதும் எந்த இணக்கப்பாடுகளும் எட்டப்படவில்லை. இன்று வரை சில பாதைகள் மாத்திரம் திறக்கப்பட்டு அவற்றைக்கூட 07. 00 மணிக்குப் பிறகு பயன்படுத்த முடியாத நிலை மயிலிட்டி போன்ற பிரதேசங்களில் உள்ளது என்று மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு - களுவாஞ்சிக்குடியில் உள்ள அவரது அலுவலகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் மேலும் கூறுகையில்,

"மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டங்களில் கூட என்னால் தொடர்ச்சியாக முன்வைக்கப்பட்டுவரும் 34 விடயங்களில் வனவள திணைக்களம் சம்பந்தப்பட்ட விடயங்கள், மகாவலி, தொல்பொருள் தொடர்பான விடயங்கள் குறித்து ஒன்றரை வருடங்களாக கூட்டங்கள் நடைபெற்றும் எந்தவித முன்னேற்றங்களும் இல்லை.

பெரும்பான்மை சமூகத்தினரால் எமது மேய்ச்சல்தரைகள் அபகரிக்கப்பட்டு சட்டவிரோதமாக அவர்கள் குடியேறிய போது அவர்களுக்கு நிரந்தரமாக அந்தக் காணிகளை கொடுக்க வேண்டுமென கோட்டாபய ராஜபக்ஷவின் ஆட்சிக்காலத்தில்கூட தீர்மானங்களை எடுக்கவில்லை.

ஆனால், தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் வந்த பிறகு வனவள திணைக்களத்தால் அத்துமீறி கெவிலியாமடுவில் எமது மேய்ச்சல்தரைகளில் குடியேறியிருக்கின்ற பெரும்பான்மை மக்களுக்கு அந்தக் காணிகளை வழங்க தீர்மானம் எடுக்கப்படுகின்றது.

தொல்பொருள் சம்பந்தமாக நாங்கள் ஆர்ப்பாட்டங்களிலும் போராட்டங்களிலும் ஈடுபட்டோம். முன்னாள் அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க குசனார் மலைக்கு வந்தபோது அவரது வழியை மறித்து இடையிலேயே திருப்பியனுப்பினோம்.

ஆனால், இந்த அரசாங்கம் வந்தபிறகு தமிழ் அதிகாரிகளை நியமித்து அவர்களை வைத்து எங்களின் அறுநூறுக்கும் அதிகமான பகுதிகளை தங்களின் கைவசம் எடுப்பதற்காக எங்களுடைய தவிசாளர்களையும் பொதுமக்களையும் நீதிமன்றத்தின் முன் நிறுத்துகின்றார்கள்.

யாழ்ப்பாணம் தையிட்டியில் விகாரை சட்டவிரோதமாக கட்டப்பட்டது. இது தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்படுவதாக தெரியவில்லை. திருகோணமலையில் நடந்த சம்பவம் பிழையென்று ஜனாதிபதி கூறுகின்றார். ஆனால், இன்றுவரை அங்கு வைக்கப்பட்ட புத்தர்சிலை அகற்றப்படவில்லை" - என்றார்.

(எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிவுல்...

எனினும், 2022ஆம் ஆண்டு ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியைத் தொடர்ந்து 2023 டிசெம்பர் 31ஆம் திகதி இந்தத் திட்டம் தற்காலிகமாக இடைநிறுத்தப் பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## தமிழர்...

நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே இந்த அழைப்பை விடுத்தார்.

இலங்கை தமிழ் அரசு கட்சியும் ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணியும் நேற்றைய தினம் யாழ். நகரின் விருந்தினர் விடுதியில் சந்தித்துப் பேசின. இதன் முடி வில் கூட்டாக செய்தியாளர் சந்திப்பு நடத்தப்பட்டது. அதில், சுமந்திரன் தெரிவித்தவை வருமாறு,

மேலும், மாகாண சபைகள் தேர்தல் முறைமை மறுசீரமைக்கப்பட வேண்டும் என்பதற்காக தேர்தலையே நடத்தாமல் இருப்பது எந்தக் காலத்திலும் ஏற்றுக் கொள்ளப்பட முடியாதது. ஆகவே, தற்போதிருக்கும் முறையில் தேர்தல் உரிய காலத்தில் நடத்தப்பட வேண்டும்.

இந்த நிலையில் தமிழ் மக்களுடைய அபிலாசைகளை பிரதிபலிக்கக்கூடிய ஓர் ஆவணம் ஒன்றைத் தயாரிக்கலாம் என்று நாங்கள் முடிவெடுத்திருக்கிறோம். இது, சம்பந்தமாக எங்கள் இரண்டு கட்சிகளும் இணைந்து இந்த முயற்சியிலே ஈடுபடப் போகிறது. இதன்போது, தமிழ் தேசிய பரப்பில் இயங்கும் ஏனைய தரப்புகளும் எங்களுடன் இணைந்து செயலாற்ற வேண்டும் என விரும்புகிறோம்.

தமிழ் தேசத்தின் நிலைப்பாடு என்ன என்பது குறித்து ஓர் ஒருமித்த நிலைப்பாட்டை வெளிப்படுத்துவது காலத்தின் தேவையாக இருக்கிறது. பலர் அரசாங்கம் சாட்டுப்போக்கு சொல்லாமல் இருப்பதற்கும் சர்வதேசத்துக்கு நேரடியாகவும் இதுதான், தமிழ் மக்களின் ஆவல் ஆசைகள் என்று சொல்லக்கூடிய வகையிலும் ஏற்கனவே பல வரைவுகள்- யோசனைகள் - ஆவணங்கள் இருந்தாலும் அவற்றையெல்லாம் எல்லாம் பார்த்து ஒரு குறித்த நிலைப்பாட்டை முன் வைப்பதற்கான முயற்சி ஒன்றை நாங்கள் ஆரம்பிக்கிறோம். வெகுவிரைவில் அதனைப் பூர்த்தி செய்வோம். மற்றவர்களும் இணைந்து தங்கள் நிலைப்பாடுகள் தெரியப்படுத்தினால் நல்லது.

மாகாண சபைகள் தேர்தல் பிற்போடப்படுவது சம்பந்தமாக நாங்கள் ஆராய்ந்தோம். மாகாண சபைகள் இயங்காமல் இருப்பது எங்களுக்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்துகிறது. தமிழ் தேசிய பிரச்னைக்கு தீர்வாகவே மாகாண சபைகள் - முறைமை கொண்டுவரப்பட்டது. அது முழுமையான தீர்வு அல்ல - நாங்கள் ஏற்றுக் கொண்ட தீர்வும் அல்ல. அது பல குறைபாடுகளோடு இயங்கினாலும் ஏழு - எட்டு வருடங்களாக அது இயங்காமல் இருந்தது. அது அரசமைப்புக்கு உட்பட்ட விடயம்.

ஜனாதிபதி தேர்தல் அறிக்கையிலே ஒரு வருட காலத்துக்குள்ளே மாகாண சபைகள் தேர்தலை நடத்தி முடிப்போம் என்று வாக்குறுதி கொடுத்திருந்தார்கள். அப்படியிருந்தும்கூட இப்போது ஒரு வருடம் நிறைவடைந்து அதற்குப் பிறகு நான்கு மாதங்களும் ஆகியும் இன்னமும் மாகாண சபைகள் தேர்தலை வைப்பதற்கான அறிகுறி கிடையாது. அதை இழுத்தடிப்பதற்கான முயற்சிகள் நடைபெறுகின்றன. இழுத்தடிப்பை விட்டு மாகாண சபைகள் தேர்தல் இருக்கின்ற முறையிலேயே நடத்தப்பட வேண்டும் - என்றார். (ஐ)

## கல்வி...

அத்துடன், "கல்விச் சீர்திருத்தங்களை முன்னெடுப்பதற்கு நாம் ஆதரவு தெரிவிக்கிறோம். ஆனால், சீர்திருத்தம் என்ற போர்வையில் கல்வியை ஆபாசமயப்படுத்தும் நடவடிக்கைகளையே நாம் எதிர்க்கிறோம்", என்றும் கூறியுள்ளார்.

நேற்று செவ்வாய்க்கிழமை பாராளுமன்றத்தில் உரையாற்றியபோதே எதிர்க்கட்சி தலைவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், "தரம் 1-6 வரையிலான கல்விச் சீர்திருத்தங்களை முன்னெடுக்க வேண்டாம் என்று எதிர்க்கட்சி ஒருபோதும் கூறவில்லை. அரசாங்கத்தால் ஆரம்பிக்கப்பட்ட கல்விச் சீர்திருத்தங்களின் ஆங்கில மொழி பாட அலகொன்றில் ஆபாச வலைத்தளமொன்று உட்சேர்க்கப்பட்டுள்ளது. இதனை எதிர்க்கட்சி செய்யவில்லை. அரசாங்கம்தான் இதனைச் செய்தது. 1-6 வரையிலான தரங்களுக்கு இந்த கல்விச் சீர்திருத்தங்கள் கொண்டு வரப்பட்டபோது இதற்கு நாம் எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை. 6 ஆம் தர ஆங்கில பாட அலகொன்றில் ஆபாச வலைத்தளமொன்று சேர்க்கப்பட்டதாலயே எதிர்ப்பை வெளிப்படுத்தினோம். இறுதியில், ஜனாதிபதியால் இந்த சீர்திருத்தங்கள் ஒரு வருடத்துக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளன. தொழில்நுட்ப சிக்கல்கள் மற்றும் ஆசிரியர் பயிற்சி தொடர்பிலான பிரச்னைகள் காரணமாக, 2027 முதல் இதனை முன்னெடுப்போம் என்று ஜனாதிபதி கூறியுள்ளார். இந்தச் சீர்திருத்தங்களை முறையாக முன்னெடுக்குமாறே எதிர்க்கட்சி கோரிக்கை விடுக்கிறது.

"அரசமைப்பில் நம்பிக்கையில்லா பிரேரணை கொண்டு வருவதற்கு ஒரு வழிமுறை காணப்படுகிறது. இது, அரசாங்கத்தின் அனுமதியுடன் முன்னெடுக்கப்பட வேண்டிய ஒன்றல்ல. கல்வி அமைச்சர் நாட்டில் இல்லாத இந்த சந்தர்ப்பத்தில், எதிர்க்கட்சியால் கொண்டு வரப்படவுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணையை அவசர அவசரமாக விவாதத்துக்கு எடுத்துக் கொள்ள இந்த அரசாங்கம் ஏன் இவ்வாறு முயற்சிக்கிறது என்பதை நினைத்துக்கூட பார்க்க முடியாதுள்ளது. அவருக்கு அநீதி இழைக்காமல், அவரது கருத்துகளை வெளிப்படுத்துவதற்கும் சந்தர்ப்பம் வழங்கி, இந்த நம்பிக்கையில்லா பிரேரணையை விவா தத்துக்கு எடுத்துக்கொள்ள வேண்டும். இந்த நேரத்தில், கல்வி அமைச்சருக்கு எதிராக அரசாங்கமே ஒரு சதித்திட்டத்தை தீட்டி வருகிறதா என்ற சந்தேகம் எழுகிறது - என்றார். (ஐ)

## அரச...

பாராளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை நடைபெற்ற அமர்வில் கேள்வி ஒன்றுக்கு பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், பல்லேகலை, தும்பர ஆகிய சிறைச்சாலைகளில் தற்போது 2 ஆயிரத்து 246 கைதிகள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். ஆனால், இந்த சிறைச்சாலைகளில் 699 சிறைக்கைதிகளை மாத்திரமே தடுத்து வைக்க முடியும். இடப்பற்றாக்குறை காரணமாகவே இந்த நெரிசல் நிலை ஏற்பட்டுள்ளது.

இந்த சிறைச்சாலையின் புதிய நிர்மாணப் பணிகளை துரிதப்படுத்தி தற்போது சிறைச்சாலைகளில் காணப்படும் நெருக்கடியை குறைப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. இதற்கமைய தும்பர சிறைச்சாலையை புனரமைக்க 436.4 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது - என்றும் தெரிவித்தார். (ஐ)

## கல்வி மறுசீரமைப்பு...

பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை நேற்று உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

தற்காலிக நிகழ்ச்சி நிரலாகவே 2023ஆம் ஆண்டு அஸ்வெசும நலன்புரித் திட்டம் அமுல்படுத்தப்பட்டது. சமூக கட்டமைப்பில் ஏழ்மையை இல்லாதொழிப்பதற்காகவே அஸ்வெசும நலன்புரி திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. இந்தத் திட்டத்தை இந்த ஆண்டுடன் நிறைவுபடுத்த 2023ஆம் ஆண்டு தீர்மானிக்கப்பட்டது.

இருப்பினும், தற்போதைய சமூக, பொருளாதார நிலைமையை கருத்தில் கொண்டு அஸ்வெசும நலன்புரித் திட்டத்தை 2027ஆம் ஆண்டு நடுப்பகுதி வரை முன்னெடுத்து செல்வதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது. இதற்கு நாங்கள் முழுமையான ஒத்துழைப்பு வழங்குக ிறோம் - என்றார். (ஐ)

## கொடிகாமம்...

குடும்பஸ்தர் ஒருவர் கொடூரமாக தாக்கப்பட்டு கொலை செய்யப்பட்டார். இது தொடர்பில் சந்தேக நபர்கள் இருவர் கைது செய்யப்பட்டு சுமார் 16 வருடங்களாக வழக்கு விசாரணைகள் நடைபெற்று வந்தன.

வழக்கு விசாரணைகள் நிறைவுற்ற நிலையில் நேற்று செவ்வாய்க்கிழமை நீதிபதி தீர்ப்பை வழங்கினார். குற்றவாளிகளுக்கு எதிரான குற்றசம் சந்தேகத்துக்கு அப்பால் நிரூபிக்கப்பட்டமையால் அவர்களிருவருக்கும் மரண தண்டனை விதிக்கப்பட்டதாக தீர்ப்பில் தெரிவிக்கப்பட்டது.

எதிரிகள் சார்பில் மூத்த சட்டத்தரணி என். சிறீகாந்தா, வழக்கு தொடுநர் வழக்கு தொடுநர் தரப்பில் சட்டமா அதிபர் திணைக்களம் சார்பாக அரச சட்டவாதி கா. நசிகேதன் ஆகியோர் முன்னிலையாகியிருந்தனர். (ஐ)

## முன்னறிவித்தல்...

நடவடிக்கையில் ஈடுபடவுள்ளதாக அந்தத் தொழிற் சங்கங்கள் தெரிவித்தன.

மின்சார சபையின் பொறியியலாளர் சங்கம், தொழில்நுட்ப பொறியியலாளர் மற்றும் அதிகாரிகளின் சங்கம், தொழில்நுட்பவியலாளர்கள் சங்கம், போக்குவரத்து ஊழியர் சங்கம், அலுவலக சேவை சங்கம், சுயாதீன அலுவலக ஊழியர் சங்கம், சுதந்திர ஊழியர் சங்கம், தேசிய ஊழியர் சங்கம், கூட்டு மின்சார சங்கம், ஐக்கிய ஊழியர் சங்கம், பதவிநிலை ஒருங்கிணைப்பு உத்தியோகத்தர்கள் சங்கம், நுகர்வோர் ஒருங்கிணைப்பு உத்தியோகத்தர்கள் சங்கம், களஞ்சியப் பொறுப்பதிகாரிகள் சங்கம், வழங்கல் உத்தியோகத்தர்கள் சங்கம், காசாளர் உத்தியோகத்தர்கள் சங்கம், கணக்கு உதவியாளர்கள் சங்கம், வயரிங் செய்பவர்கள் மற்றும் தொழில்நுட்ப ஊழியர் சங்கம், உள்ளக தணிக்கை உத்தியோகத்தர்கள் சங்கம், விசாரணை உத்தியோகத்தர்கள் சங்கம், வரைவாளர் சங்கம், சுருக்கெழுத்தாளர் மற்றும் தட்டச்சாளர் சங்கம், கட்டுப்பாட்டு அறை இயக்குநர்கள் சங்கம், அழைப்பு மைய இயக்குநர்கள் சங்கம், பாதுகாப்பு வலுவூட்டல் மன்றம் உள்ளிட்ட தொழிற்சங்கங்களே இவ்வாறு வேலை நிறுத்த போராட்டத்தில் ஈடுபடவுள்ளதாக அறிவித்துள்ளன.

இது தொடர்பில் கொழும்பில், நேற்று செவ்வாய்கிழமை நடத்தப்பட்ட செய்தியாளர் மாநாட்டில் கருத்து வெளியிட்ட இலங்கை மின்சார சபை சுதந்திர சேவைகள் சங்கத்தின் பொதுச் செயலாளர் பிரபாத் பிரியந்த கூறுகையில்,

"மின்சார சபையை முற்றாக நீக்குவதற்கான வர்த்தமானி அறிவித்தலில் கையெழுத்திடுவதற்கு சகல ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன என்று எமக்கு தகவல்கள் கிடைத்துள்ளன. மின்சார சபை சட்டத்திலும், உயர்நீதிமன்ற உத்தரவிலும் இந்த நடைமுறைக்கு செல்ல முன்னர் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே, இந்த வர்த்தமானி அறிவித்தலை வெளியிடுவதை ஒத்திவைக்குமாறு வலுசக்தி அமைச்சரையும் அரசாங்கத்தையும் வலியுறுத்துகிறோம். கடந்த வாரம் இது குறித்து 8 காரணிகளை வலியுறுத்தி வலுசக்தி அமைச்சருக்கு எழுத்து மூல கோரிக்கையொன்றை கையளித்திருக்கிறோம். ஆனால், அமைச்சரிடமிருந்து அதற்கு எந்தவொரு பதிலும் கிடைக்கவில்லை. எம்முடன், கலந்தாலோசிக்காது இவ்வாறு ஏதேனும், நடவடிக்கைகள் எடுக்கப்பட்டால் எவ்வித முன்னறிவிப்புமின்றி நாடளாவிய ரீதியில் வேலை நிறுத்தத்தில் ஈடுபடுவோம் என்பதை உறுதியாகக் கூறிக் கொள்கிறோம் - என்றார். (ஐ)

## தமிழீழ...

ஒடுக்குமுறைகளுக்கு எதிராக போராடியமைக்காக சுமார் 5 ஆண்டுகள் சிறையில் அடைக்கப்பட்டார்.

தமிழீழ விடுதலை இயக்கம் (ரெலோ) என்ற அமைப்பை நிறுவிய இவர், அதன் தலைவராகவும் செயல்பட்டிருந்தார். போராட்ட அமைப்புகளில் தீவிரமாக செயல்பட்டபோதிலும் கல்வியைத் தொடர்ந்தார். சட்டத்துறையில் மேற்படிப்பை தொடர்ந்த அவர் 1980களின் ஆரம்பத்தில் அமெரிக்காவுக்கு புலம்பெயர்ந்தார்.

அங்கு சர்வதேச மன்னிப்பு சபையின் பிரசார இயக்குநராக 22 வருடங்களுக்கும் மேலாக பணியாற்றியிருந்தார். புலம்பெயர்ந்து வாழ்ந்தபோதிலும் போராட்ட அமைப்புகள் பலவற்றுக்கு வழிகாட்டியாகவும் ஆலோசகராகவும் செயல்பட்டார். அத்துடன், தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்துக்காக பல்வேறு வழிகளிலும் தொடர்ந்தும் இயங்கி வந்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## வீட்டு திட்ட...

முன்னெடுக்கப்பட்டது.

போராட்ட த்தில் ஈடுபட்ட வர்கள், "தற்போதைய ஆளுநர் யாழ். மாவட்ட செயலராக பணியாற்றிய 2019ஆம் ஆண்டு காலப்பகுதியில் அரசாங்கம் நடைமுறைப்படுத்திய வீட்டு திட்டங்களுக்கான கொடுப்பனவுகள் இன்றுவரை வழங்கப்படவில்லை. இதனால், நாம் பெரும் சிரமங்களுக்கு உள்ளாகிறோம். மழைகாலத்தில் இருக்க இடமின்றி அந்தரப்படுகிறோம்.

எனவே, முன்னைய வீட்டு திட்டங்களுக்கான கொடுப்பனவுகளை வழங்காமல் புதிய வீட்டு திட்டங்களுக்கு கொடுப்பனவுகள் வழங்கப்படுகின்றன. இது எமக்கு மிக மனவேதனையை தருகிறது. எமது பிரச்னைக்கு உடன் தீர்வு தருமாறு கோரியே இந்தப் போராட்டத்தை முன்னெடுத்துள்ளோம்", என்று தெரிவித்தனர். (ஐ)

## விபத்துகளில்...

தெரிவித்துள்ளார்.

நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

இந்த ஆண்டு ஆரம்பம் முதல் 19ஆம் திகதி வரை நாட்டில் 113 வீதி விபத்துகள் பதிவாகியுள்ளன. இவற்றில் 120 பேர் உயிரிழந்தனர்.

மேலும், இந்த விபத்துகளால் 216 பேர் படுகாயங்களுக்கு உள்ளாகினர். 490 சிறு விபத்துக்களும் பதிவாகியுள்ளன. அத்துடன், 159 விபத்துகள் சொத்து சேதங்களை ஏற்படுத்தியுள்ளன. இந்த விபத்துகளில் அதிகளவாக பாதசாரிகளே உயிரிழந்தனர். 33 பாதசாரிகள் உயிரிழந்தனர் என்றும் அவர் கூறினார். (ஐ)

## திருமலையில்...

சரத் வீரசேகர.

மேலும், திருகோணமலை கடலோரப் பகுதியில் புத்தர் சிலையொன்றை நிறுவியமைக்காக பௌத்த பிக்குகள் உள்ளிட்ட 10 பேர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளமை அரசாங்கத்தின் திட்டமிட்ட சதி என்றும் நேற்று அவரின் கட்சி தலைமையகத்தில் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் அவர் கூறியுள்ளார்.

திருகோணமலையில் குறித்த இடத்தில் புத்தர் சிலையொன்றை நிறுவுவதற்கு நகர்ப்புற அபிவிருத்தி அதிகார சபையால் அனுமதி வழங்கப்பட்டுள்ளதுடன், அந்த இடத்தைச் சுற்றி வேலி அமைப்பதற்கும் அனுமதி கிடைத்துள்ளது. கடலோர பாதுகாப்புத் திணைக்களத்தால் 1951 ஆம் ஆண்டு முதல் அங்கிருந்த தஹம் பாடசாலையை புனரமைப்பதற்கான தெளிவான அனுமதி கடிதமும் வழங்கப்பட்டுள்ளது. இவ்வாறான உத்தியோகபூர்வ ஆவணங்கள் இருக்கும் நிலையில், சட்டமா அதிபர் திணைக்களத்தின் சார்பில் முன்னிலையான ஒரு சிங்கள சட்டத்தரணி, அந்த ஆவணங்கள் போலியானவை எனக் கூறி பிக்குகளை சிறையிலடைக்க கடுமையாக முயற்சித்துள்ளார் - என்றும் அவர் சாடியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# யாழில் இனங்களுக்கு இடையே குரோதத்தை ஏற்படுத்திய அநுரவைக் கைது செய்யுங்கள்!

## குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தில் முறைப்பாடு

கொழும்பு, ஜன. 21

யாழ்ப்பாணத்தில் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க அண்மையில் ஆற்றிய உரை, இனங்களுக்கிடையிலும் மதங்களுக்கிடையிலும் குரோதத்தை உண்டாக்கும் வகையில் அமைந்துள்ளதாகத் தெரிவித்து, அவருக்கு எதிராக நேற்று முன்தினம் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தில் முறைப்பாடொன்று பதிவு செய்யப்பட்டுள்ளது.

பிவிதுரு ஹெல உறுமய அமைப்பின் இளைஞர் விவகார செயலாளர் குமார ராஜரத்ன உள்ளிட்ட பிரதிநிதிகள் குழுவினரே இந்த முறைப்பாட்டை பதிவு செய்திருந்தனர்.

ஜனாதிபதியின் கருத்துக்கள் நாட்டின் ஐக்கியத்துக்கு அச்சுறுத்தலாக இருப்பதாகவும், இது தொடர்பில் உடனடி விசாரணைகள் முன்னெடுக்கப்படவேண்டும் என வலியுறுத்தியுள்ளனர்.

கடந்த 16 ஆம் திகதி ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க ஆற்றிய உரையானது, சமூக வலைத்தளங்களில் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளதாக முறைப்பாட்டாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

குறிப்பாக, வடக்கு மற்றும் தெற்கு மக்களுக்கிடையே விரிசலை ஏற்படுத்தும் உள்நோக்கத்துடன் இந்த கருத்துக்கள் முன்வைக்கப்பட்டுள்ளதாக அவர்கள் குற்றம் சுமத்துகின்றனர்.

இது குறித்து ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த குமார ராஜரத்ன-

ஜனாதிபதி தனது உரையின் மூலம் இனங்களுக்கிடையிலும் மதங்களுக்கிடையிலும் வன்முறையையும் பிரிவினையையும் ஏற்படுத்தத் திட்டமிட்டு முயற்சித்துள்ளார்.

இது தண்டனைக்குரிய குற்றமாகும். புனித பூமிகளை மையப்படுத்தி அவர் வெளியிட்ட கருத்துக்கள், பௌத்த மக்கள் வடக்கு நோக்கி வருவது குரோதத்தை பரப்புவதற்கே என்ற தோரணையில் அமைந்திருந்தன.

மதச் சுதந்திரமும், நாட்டின் எந்தப் பகுதிக்கும் செல்வதற்கான உரிமையும் உள்ள ஒரு நாட்டில், இத்தகைய கருத்துக்கள் தமிழ் மக்களிடையே சிங்கள மக்கள் மீது தேவையற்ற பகையை உருவாக்கும்.

தற்போது ஜனாதிபதிக்கு சட்ட விலக்களிப்பு காணப்படுவதால் உடனடியாகக் அவரை கைது செய்ய முடியாது என்பதை நாம் அறிவோம்.

எனினும், அவரது பதவிக்காலம் முடிந்தவுடன், சர்வதேச சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் உடன்படிக்கை சட்டத்தை மீறியமைக்காக அவருக்கு எதிராகக் கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். ஜனாதிபதியின் இந்த கருத்துக்கள் தொடர்பில் அனைத்து சட்ட ரீதியான ஆதாரங்களையும் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திடம் கையளித்துள்ளோம்.

அவரது பதவிக்காலம் நிறைவடைந்ததும் அவரைக் கைது செய்து நீதிமன்றில் முன்னிலைப்படுத்துவதற்கான பணிகளை இப்போதே ஆரம்பிக்குமாறு கோரிக்கை விடுத்துள்ளோம்-என்றார். (அ)

# தந்தையின் கையிலிருந்து கீழே விழுந்த இரண்டரை வயது குழந்தை உயிரிழப்பு!

கொழும்பு, ஜன. 21

தந்தையின் கையிலிருந்த இரண்டரை வயது குழந்தை ஒன்று கீழே விழுந்ததில் தலையில் பலத்த காயம் ஏற்பட்டு உயிரிழந்த சம்பவம் களுத்துறை - அலுபோமுல்ல பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளதாக அலுபோமுல்ல பொலிஸார் தெரிவித்தனர்.

அலுபோமுல்ல பிரதேசத்தைச் சேர்ந்த இரண்டரை வயதுடைய பெண் குழந்தையே உயிரிழந்துள்ளது.

தந்தை கடந்த 7 ஆம் திகதி தனது வேலையை முடித்துவிட்டு வீடு திரும்பிய நிலையில் தனது குழந்தையை கையில் வைத்துக்கொண்டு சற்று உறங்கியதால் குழந்தை கையிலிருந்து கீழே தரையில் விழுந்துள்ளது.

தரையில் விழுந்ததில் குழந்தையின் தலையில் பலத்த காயம் ஏற்பட்டுள்ளது. குழந்தை உடனடியாக கொழும்பு ரிட்ஜ்வே வைத்தியசாலையின் தீவிர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்ட பின்னர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவம் தொடர்பில் குழந்தையின் தந்தை பொலிஸாரால் கைது செய்யப்பட்டார். (அ)

# செம்மணி புதைகுழி 3ஆம் கட்ட அகழ்வுக்கு ஒதுக்கிய நிதி திறைசேரிக்குத் திரும்பியது!

கொழும்பு, ஜன. 21

செம்மணி மனித புதைகுழியின் மூன்றாம் கட்ட அகழ்வு பணிகளுக்கு ஒதுக்கப்பட்ட நிதி திரும்பிச் சென்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

செம்மணி மனித புதைகுழியில் இருந்து இதுவரை இரண்டு கட்டங்களாக மேற்கொள்ளப்பட்ட அகழ்வுப் பணிகளின்போது, 240 மனித என்புக்கூட்டு எச்சங்கள் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில் 239 என்புக்கூட்டு எச்சங்கள் அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில் மேலும் எலும்புக்கூடுகள் அப்பகுதிகளில் காணப்படுவதால் மூன்றாம் கட்ட அகழ்வுப் பணிகளை முன்னெடுக்கவேண்டும் எனவும், அதற்காக 8 வார கால பகுதி தேவை என சட்ட வைத்திய அதிகாரி மன்றில் விண்ணப்பம் செய்ததற்கு அமைவாக அதற்கான செலவீன பாதீட்டை மன்றில் சமர்ப்பிக்க உத்தரவிடப்பட்டது.

அதன் அடிப்படையில் சட்ட வைத்திய அதிகாரியினால் மூன்றாம் கட்ட அகழ்வுப் பணிக்கான பாதீடு தயாரிக்கப்பட்டு மன்றில் சமர்ப்பிக்கப்பட்டதை அடுத்து அது அங்கீகரிக்கப்பட்டு , நீதி அமைச்சுக்கு அனுப்பி வைக்கப்பட்டதன் பிரகாரம் கடந்த ஆண்டு ஒக்ரோபர் மாதம் நிதி விடுவிக்கப்பட்டது.

அதனை தொடர்ந்து மூன்றாம் கட்ட அகழ்வாய்வுப் பணிகளை முன்னெடுக்க ஆயத்தங்களை செய்யவேளை யாழில் நிலவிய சீரற்ற கால நிலைகளால் புதைகுழிக்குள் வெள்ள நீர் தேங்கி நின்றமையால் அகழ்வாய்வுப் பணிகள் தொடர்ந்து முன்னெடுக்க முடியாத நிலைமை காணப்பட்டது.

அந்நிலையில் கடந்த ஆண்டு ஒதுக்கப்பட்ட நிதிகளில் செலவு செய்யப்படாத நிதிகள் திறைசேரிக்கு திரும்பியுள்ளது. அதனால் இவ்வாண்டுக்கு மீண்டும் புதிதாக செலவீன பாதீட்டு அறிக்கை தயாரிக்கப்பட்டு மன்றினால் அது அங்கீகரிக்கப்பட்டு மீண்டும் நீதி அமைச்சினால் அந்த நிதி மீள ஒதுக்கப்படும் என தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை செம்மணி புதைகுழிப் பகுதிக்குள் தற்போதும் வெள்ளம் தேங்கி நிற்பதனால் எதிர்வரும் 09ஆம் திகதி நீதிமன்ற நேரடிக் கண்காணிப்பில் நல்லூர் பிரதேச சபையினால் வெள்ள நீரை வெளியேற்றும் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

அன்றைய தினத்துக்கு பின்னரே மூன்றாம் கட்ட அகழ்வு பணிகள் தொடர்பிலான முடிவுகள் எடுக்கப்படும் என நீதிமன்றம் நேற்று மு.ன்தினம் திங்கட்கிழமை அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# இந்திய இராணுவத்தால் இலங்கைக்கு 20 புதிய ஜீப் வாகனங்கள் அன்பளிப்பு

கொழும்பு, ஜன. 21



இந்திய இராணுவ பிரதானி ஜெனரல் உபேந்திர திவேதி இலங்கை இராணுவத்துக்கு நன்கொடையாக வழங்கிய 20 புதிய ஜீப் வாகனங்களின் பயன்பாட்டின் மூலம், இலங்கை இராணுவம் மாதத்துக்கு 1.5 மில்லியன் ரூபாவை சேமிக்க கூடியதாகவுள்ளது.

இரு இராணுவத் தளபதிகளுக்கும் இடையிலான இருதரப்பு உறவின் அடையாளமாக, இந்திய இராணுவ பிரதானியின் அண்மைய இலங்கை விஜயத்தின்போது இந்தத் ஜீப் வாகனங்கள் இலங்கை இராணுவத்துக்கு உத்தியோகபூர்வமாக கையளிக்கப்பட்டன.

நிர்வாக மற்றும் களப் பணிகளுக்காக தனியார் துறையிலிருந்து வாடகைக்கு எடுக்கப்பட்ட வாகனங்களுக்கு இராணுவம் மாதத்துக்கு ரூ. 1.5 மில்லியன் (ரூபா 15 இலட்சம்) செலவிடவேண்டியிருந்தது.

இந்தப் புதிய ஜீப் வாகனங்கள் பயன்படுத்தப்படுவதன் மூலம், அந்த வாடகை வாகனங்களை பயன்பாட்டிலிருந்து அகற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் இது அரசாங்கத்துக்கு ஆண்டுக்கு ரூ. 18 மில்லியனுக்கும் அதிகமாக பணத்தை மீதப்படுத்தியுள்ளது. (அ)

# தமிழ் முற்போக்குக் கூட்டணி பிரான்ஸ் தூதுவருடன் சந்திப்பு

கொழும்பு, ஜன. 21

மலையக மக்களின் காணி உரிமைகள் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் இலங்கைக்கான பிரான்ஸ் தூதுவர் ரெமி லம்பேர்ட்டுடன், தமிழ் முற்போக்கு கூட்டணியினர் கலந்துரையாடியுள்ளனர்.

மலையக சமூகத்தின் கௌரவம், பாதுகாப்பு, நீதி மற்றும் விட்டுக்கொடுக்க முடியாத அடித்தளமாக "காணி உரிமைகள்" அமையவேண்டும் என்பதே இந்தக் கலந்துரையாடலின் முக்கிய நோக்கமாக இருந்ததாக தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர், பாராளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் தெரிவித்தார்.

நிரந்தர வீட்டு வசதிகளைப் பெறுவதில் மலையக பெருந்தோட்ட மக்கள் எதிர்கொள்ளும் தொடர்ச்சியான பாகுபாடுகள் குறித்தும், பிரான்ஸ் தூதுவரிடம், மனோ கணேசன் எடுத்துக் கூறியுள்ளார்.

இந்த நிலையில், அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்குப் பாதுகாப்பான நிலம் மற்றும் நிலையான மீள்குடியேற்றத்தை வழங்கப்பட வேண்டும் பதிலாக, அவர்களை மீண்டும் மண்சரிவு அபாயம் உள்ள, உயர் ஆபத்துள்ள பகுதிகளுக்கே வலுக்கட்டாயமாக அனுப்பும் செயற்பாடுகள் கவலையளிக்கும் நடைமுறை எனவும் இதன்போது சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

தலைமுறைகளாகக் கட்டமைப்பு ரீதியான அநீதிகளைச் சுமந்து வரும் சமூகங்களுக்கு, மீட்பு முயற்சிகள் என்பது வெறுமனே வீடுகளைக் கட்டியெழுப்புவது மட்டுமல்ல.

மாறாக அந்த மக்களின் இழந்த கௌரவம், பாதுகாப்பு மற்றும் நீண்டகால நீதியை மீட்டெடுப்பதே என்பதை உறுதிப்படுத்துவதில் சர்வதேச பங்காளித்துவத்தின் முக்கியத்துவத்தை இந்த கலந்துரையாடல் மீண்டும் உறுதிப்படுத்தியதாக தமிழ் முற்போக்கு கூட்டணி குறிப்பிட்டுள்ளது. (அ)

# விடத்தல்தீவு சரணாலய எல்லை மாற்றம் முன்னைய அரசின் வர்த்தமானி இரத்து!

கொழும்பு, ஜன. 21

மன்னார் - விடத்தல்தீவு இயற்கை சரணாலயத்தில் இறால் வளர்ப்புத் திட்டத்தை முன்னெடுப்பதற்காக, அதன் எல்லைகளை மாற்றி அமைத்து வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலை இரத்துச் செய்ய அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

அதற்கமைய, வனஜீவராசிகள் மற்றும் வனவளப் பாதுகாப்பு முன்னாள் அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சியின் பதவிக்காலத்தில், 2024 ஆம் ஆண்டு மே 6 ஆம் திகதி வெளியிடப்பட்ட வர்த்தமானி (இல. 2383/05) செல்லுபடியற்றதாக்கப்பட்டுள்ளது.

இதற்குப் பதிலாக, 2025ஆம் ஆண்டு நவம்பர் 21 ஆம் திகதியிடப்பட்ட புதிய விசேட வர்த்தமானி (இல. 2463/47) மூலம் முன்னைய அறிவித்தல் அதிகாரபூர்வமாக ரத்து செய்யப்பட்டுள்ளதாக சட்டமா அதிபர் உயர் நீதிமன்றத்தில் தெரிவித்தார்.

அரசாங்கம் இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளதையடுத்து, குறித்த வர்த்தமானிக்கு எதிராக சுற்றாடல் அமைப்புகளால் தாக்கல் செய்யப்பட்டிருந்த அடிப்படை உரிமைகள் மனுக்கள் நேற்று முன் தினம் மீளப்பெறப்பட்டன.

இலங்கை வனவிலங்கு மற்றும் இயற்கை பாதுகாப்பு சங்கம், சுற்றுச்சூழல் நீதிக்கான மையம் மற்றும் சுற்றுச்சூழல் அறக்கட்டளை உள்ளிட்ட அமைப்புகள் இந்த மனுக்களைத் தாக்கல் செய்திருந்தன.

விடத்தல்தீவு இயற்கை சரணாலயம் இலங்கையின் மிக முக்கியமான கடல்சார் மற்றும் கடலோரப் பாதுகாக்கப்பட்ட பகுதிகளில் ஒன்றாகும்.

இது அடர்த்தியான சதுப்புநிலக் காடுகள், உவர் சதுப்பு நிலங்கள், கடற்பாசி படுகைகள் மற்றும் பவளப்பாறைகளைக் கொண்ட ஒரு வளமான சுற்றுச்சூழல் மண்டலமாகும்.

இது அரிய வகை உயிரினங்களின் வாழ்விடமாக இருப்பதுடன், உள்ளூர் மக்களின் வாழ்வாதாரத்திற்கும் பெரும் பங்களிப்பை வழங்குகிறது.

முன்னைய வர்த்தமானி மூலம் இந்த சரணாலயத்தின் ஒரு பகுதி பாதுகாப்பு அந்தஸ்திலிருந்து நீக்கப்பட்டமை பாரிய சுற்றாடல் பாதிப்பை ஏற்படுத்தும் எனச் சூழலியலாளர்கள் தொடர்ச்சியாக எச்சரித்து வந்த நிலையில், தற்போது அதன் பாதுகாப்பு மீள உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 21.01.2026 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.